பக்கங்கள்:-30

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மாசி 01 | ஞாயிற்றுக்கிழமை | 15.02.2026 | அதிர்வு 199

## 13ஆம் திருத்தம்: டில்லி - ஜே.வி.பி. விரிவான பேச்சு

ஜே.வி.பி. தலைவர்களின் இந்தியப் பயணம், இலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் இந்தியா

05



### தென்னிலங்கையில் துப்பாக்கிகள் முழக்கம்

# ஒரே இரவில் இருவர் சுட்டுப் படுகொலை!

### மூவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

### பாதாள உலகக் குழுக்களின் மோதலா? பொலிஸார் தீவிர விசாரணை வேட்டை

**தென்னிலங்கையின் இருவேறு பகுதிகளில் நேற்று இரவு அரங்கேறிய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் இரண்டு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு - ஜிந்துப்பிட்டி மற்றும் களுத்துறை - வஸ்கடுவ ஆகிய இடங்களிலேயே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன**

02






பொதுவாக வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வதற்காக சர்வதேச விமான நிலையத்திற்கு செல்வோரை விமான நிலையத்தில் அதிக நெருக்கடி இருக்குமானால் நேரத்துடன் – சுமார் மூன்று, நான்கு மணி நேரம் முன்கூட்டியே – வரும்படி முன்னறிவித்தல் கொடுப்பதுண்டு.

ஆனால் ஒரு விளையாட்டு நிகழ்ச்சியைப் பார்ப்பதாயின் அந்த விளையாட்டு ஆரம்பிப்பதற்கு நான்கு மணி நேரத்துக்கு முன்னரே மைதானத்திற்கு வரும்படி பார்வையாளர்களை அழைப்பது பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ஆம். இன்று கொழும்பில் பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற இருக்கும் ரி 20 உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டத்தைப் பார்வையிடும் ரசிகர்களை ஆட்டம் ஆரம்பமாவதற்கு நான்கு மணி நேரத்துக்கு முன்னரேயே மைதானத்துக்கு வரும்படி பொலிஸாரே அறிவுறுத்தி இருக்கின்றனர்.

இந்தச் சுற்றுப்போட்டியில் அதிக சர்ச்சைக்குரிய ஆட்டம் என்று கருதப்படும்

06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# சிறீதரன் நீக்கம் உட்கட்சி விடயம்! பகிரங்கமாகச் சொல்ல முடியாது!!

## எதிர்காலத்தில் உண்மையைச் சொல்வோம் என சுமந்திரன் அதிரடி

(எஸ்.நிதர்ஷன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நீக்கப்பட்டமை கட்சியின் உட்கட்சிவிவகாரமாகும். இது குறித்து கிளிநொச்சியிலிருந்து வந்த பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்துள்ளேன். இருப்பினும், இதனை முழுமையாகப் பகிரங்க வெளியில் சொல்வதற்கு இது தருணமல்ல. தேவை ஏற்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் உண்மைகளை வெளிப்படுத்துவோம்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சிறீதரன் எம்.பி. பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கிளிநொச்சி மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சித் தலைமையகத்தில் சுமந்திரனைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்தனர். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:–

### ஆலோசனைகளை சிறீதரன் ஏற்கவில்லை

“கிளிநொச்சியிலிருந்து வந்த பிரதிநிதிகளுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினேன். அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு உரிய விளக்கங்களை அளித்துள்ளேன்.

சிறீதரன் விவகாரம் என்பது ஓராண்டு காலமாக நீடித்து வரும் ஒரு விடயமாகும். கட்சி அவருக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆலோசனைகளை வழங்கியிருந்தது. இறுதியாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களையும் அவர் பின்பற்றாத காரணத்தினாலேயே, அவரை நியமித்த அரசியல் குழு தற்போது அவரை அந்தப் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கியுள்ளது.

### சாணக்கியன் தற்காலிக நியமனம்

தற்போது ஏற்பட்டுள்ள தற்காலிக ஏற்பாட்டின் படி, நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அந்தப் பதவியைப் பொறுப்பேற்பார். உண்மையில் அந்தப் பதவிக்குரிய பணிகளை இதுவரையில் அவரே முன்னெடுத்து வந்தார். இது ஏற்கனவே அரசியல் குழுவால் எடுக்கப்பட்ட தீர்மானமாகும்.

இது குறித்து கிளிநொச்சியிலிருந்து வந்த பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்துள்ளேன். இருப்பினும், இதனை முழுமையாகப் பகிரங்க வெளியில் சொல்வதற்கு இது தருணமல்ல. தேவை ஏற்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் உண்மைகளை வெளிப்படுத்துவோம்.

### சிறீதரன் திட்டமிட்டு பழிவாங்கல்

இதேவேளை, சுமந்திரனுடனான சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட மக்கள் ஒன்றியப் பிரதிநிதிகள், ”கட்சிக்குள் நிலவும் குழப்பங்கள் ஆரோக்கியமானவை அல்ல. சிறீதரன் எம்.பி. திட்டமிட்டுப் பழிவாங்கப்படுகின்றார். அவருக்கு எதிராகச் சதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான கீழ்த்தரமான அரசியல் கலாசாரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, கட்சி ஒருமித்த பயணத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதை சுமந்திரனிடம் வலியுறுத்தியுள்ளோம்.” – என்றனர்.

## ஒரே இரவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

### சிகையலங்கார நிலையத்துக்குள் புகுந்து தாக்குதல்

கொழும்பு, ஜிந்துப்பிட்டி பகுதியில் உள்ள சிகையலங்கார நிலையம் ஒன்றுக்குள் நேற்று இரவு புகுந்த இனந்தெரியாத நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர், கட்டடத்தின் மேல் மாடியில் அமைந்துள்ள குறித்த நிலையத்துக்குள் ரி – 56 ரக துப்பாக்கியுடன் நுழைந்து சரமாரியாகச் சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததுடன், அங்கிருந்த மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுக்க நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

### களுத்துறையில் மற்றுமொரு படுகொலை

இதேவேளை, களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாடியமங்கட – வஸ்கடுவ பகுதியில் நேற்று இரவு 7.50 மணியளவில் மற்றுமொரு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதில் 32 வயதுடைய எஸ். புஷ்பகுமார என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மேற்படி இளைஞர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### பொலிஸார் தீவிர விசாரணை

களுத்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உதய குமார மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுனெத் சாந்த ஆகியோரின் ஆலோசனையின் பேரில், களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் துஷார டி சில்வா தலைமையிலான குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இரு சம்பவங்களும் பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான மோதலா அல்லது தனிப்பட்ட பகையா என்பது குறித்து பொலிஸார் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

## இலங்கையின் சுதந்திர தினத்தன்று

# யாழ்.பல்கலையில் கறுப்புக்கொடி: சட்ட நடவடிக்கை எடுக்க அரசு முடிவு



இலங்கையின் சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கறுப்புக்கொடி ஏற்றிய மாணவர்களுக்கு எதிராக இம்முறை கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவித்து தமிழர் தாயகத்தில் இம்முறை போராட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இதைமுன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அண்மைய கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன், கறுப்புக்கொடி ஏற்றிய மாணவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருட சுதந்திர தினத்தன்றும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட மாணவர்களின் ஒளிப்படங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழகத்துக்கு அறிக்கை அனுப்பியிருந்தது. எனினும், யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது தொடர்பிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அண்மைய கலந்துரையாடலில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் இடம்பெறாமல் எவ்வாறு தவிர்ப்பது என்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது. இது தொடர்பாகவும் விசேட அறிக்கையொன்றை வழங்குமாறு பல்கலைக்கழகத்தைக் கோரியுள்ளது என்றும் தெரியவருகின்றது.




# அரகலயவின் பின்னணியில் உள்ள சக்திகள் யார்? எமது ஆட்சியில் ஆணைக்குழு மூலம் விசாரணை

## இப்படி நாமல் எம்.பி. உறுதி

"அரகலய" போராட்டத்தின் பின்னணி மற்றும் அதற்காக வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப் பெற்ற நிதி தொடர்பில், எதிர்காலத்தில் அமையவுள்ள எமது ஆட்சியில் ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

"தேசிய மக்கள் சக்தி அரசு நாட்டு மக்களுக்கு வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிராகப் போராடுவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று தாமே பல்வேறு ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அரசின் இத்தகைய முறைகேடுகள் குறித்து நாம் கேள்வி எழுப்புவதாலேயே, எமக்கு எதிராகப் பல்வேறு அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

தமது குறுகிய அரசியல் நலன்களுக்காக இளைஞர்களின் வாழ்க்கையைப் பணயம் வைக்கும் தந்திரோபாயத்தை ஜே.வி.பி. 1988ஆம் ஆண்டிலிருந்தே கடைப்பிடித்து வருகின்றது. இவர்களது இத்தகைய செயற்பாடுகளால் கடந்த காலங்களில் பல இளைஞர்கள் உயிரை இழந்துள்ளனர். கடந்த "அரகலய" போராட்டத்தின் போதும் இதையே நாம் கண்டோம்.

அரகலய போராட்டம் எவ்வாறு திட்டமிடப்பட்டது? அதன் பின்னணியில் இருந்த சக்திகள் யார்? குறிப்பாக, அந்தப் போராட்டத்துக்காக வெளிநாடுகளில் இருந்து வந்த பெருமளவிலான பணம் மற்றும் அதன் உண்மையான நோக்கம் என்ன என்பது குறித்து எமது ஆட்சியில் முறையான விசாரணை நடத்தப்படும். இதற்காக விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட்டு உண்மைகள் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படும்." - என்றார்.

# மக்களின் பசியால் வெடித்ததே ‘அரகலய’ அது வெளிநாட்டுச் சதி நடவடிக்கை அல்ல

## விசாரணைகளில் இருந்து தப்பிக்கவே நாமல் எம்.பி. நாடகமாடுகின்றார் என்று அமைச்சர் விஜித பதிலடி



“அரகலய” போராட்டத்தின் பின்னணியில் வெளிநாட்டுச் சதி இருக்கின்றது என்று நாமல் ராஜபக்ஷ எம்.பி. சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள், தோல்வியுற்ற அரசியல்வாதிகளின் விரக்தியையே காட்டுகின்றன என்று தேசிய மக்கள் சக்தி அரசு பதிலடி கொடுத்துள்ளது.

நாமல் ராஜபக்ஷவின் கருத்துக்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

“அரகலய என்பது வெளிநாட்டு நிதியில் இயங்கியது அல்ல் அது ராஜபக்ஷக்களின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் மக்கள் பட்டினியால் வாடியபோது வெடித்த தன்னிச்சையான மக்கள் எழுச்சியாகும். எரிபொருள் வரிசைகளிலும், மின்சாரத் தடையிலும் மக்கள் அவதிப்பட்டபோது இந்த “தேசப்பற்று” எங்கே போனது? மக்கள் வழங்கிய ஜனநாயகத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாமல், அதனை வெளிநாட்டுச் சதி என்று கூறுவது ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் அவமதிக்கும் செயலாகும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்த விசாரணைகளை எமது அரசு தீவிரப்படுத்தியுள்ளது. குறிப்பாக, வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் திருடப்பட்ட தேசிய சொத்துக்களை மீட்பதற்கான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த விசாரணைகளிலிருந்து தப்பிப்பதற்கும், மக்கள் மத்தியில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்குமே நாமல் ராஜபக்ஷ இவ்வாறான ஆதாரமற்ற கருத்துக்களைக் கூறி வருகின்றார்.

கடந்த“அரகலய”போராட்டத்தின்போது அமைதியானமுறையில்போராடியஇளைஞர்கள் மீது குண்டர் தாக்குதல்களை ஏவிவிட்டது யார் என்பது ஒட்டுமொத்த நாட்டுக்கும் தெரியும். அன்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இளைஞர்களை ஒடுக்கியவர்கள், இன்று அவர்கள் மீது ஆணைக்குழு அமைப்பதாகக் கூறுவது வேடிக்கையானது. 1988/89 காலப்பகுதியைப் பற்றிப் பேசும் நாமல், கடந்த காலங்களில் இளைஞர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அரச வன்முறைகளை முதலில் திரும்பிப் பார்க்க வேண்டும்.

நாம் எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் அல்லது அடக்குமுறைக்கும் அஞ்சப் போவதில்லை. ஊழல்வாதிகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றித் தொடரும்.

பழைய திருடர்களைப் பாதுகாக்கும் அரசியல் கலாசாரம் இனி இலங்கையில் செல்லுபடியாகாது.” - என்றார்.

# ‘முழு நாடுமே ஒன்றாக’ நடவடிக்கை: வெள்ளிக்கிழமை 780 பேர் கைது



ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான “முழு நாடுமே ஒன்றாக” எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 780 பேர் போதைப் பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 12 பேரும், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 773 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், மூவர் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இந்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப்பொருள்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய, சந்தேகநபர்களிடமிருந்து, 285 கிராம் ஹெரோயின், 648 கிராம் ஐஸ், 06 கிராம் கொக்கெயின், 578 கிராம் கஞ்சா, 2,147 கஞ்சா செடிகள், 90 கிராம் ஹஷீஷ் ரக போதைப் பொருள், 1,024 போதை மாத்திரைகள், 01 கிலோகிராம் 848 கிராம் 350 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 478 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அரகலயவை வன்முறையாக மாற்றியவர்கள் ராஜபக்ஷக்களே!

## நாமல் எம்.பியின் கருத்துக்கு அமைச்சர் வசந்த தக்க பதிலடி



“அரகலய” போராட்டத்தை வன்முறைப் பாதைக்கு இட்டுச் சென்றவர்கள் ராஜபக்ஷக்களே என்றும், அமைதியான போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்களே அதன் பின்விளைவுகளுக்குப் பொறுப்பு என்றும் அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரகலய போராட்டத்தின் பின்னணி மற்றும் வெளிநாட்டு நிதி தொடர்பாகத் தமது ஆட்சியில் ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்து விசாரணை நடத்தப்படும் என்று நாமல் ராஜபக்ஷ எம்.பி. விடுத்திருந்த கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து ஊடகங்களிடம் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

“அரகலய போராட்டம் என்பது ஆரம்பத்தில் மிகவும் ஜனநாயக ரீதியாகவும், அமைதியான முறையிலுமே முன்னெடுக்கப்பட்டது. ஆனால், நீண்ட நாட்களாக அமைதியாக இடம்பெற்று வந்த இந்தப் போராட்டத்தின் மீது ராஜபக்ஷ தரப்பினரே தாக்குதல்களை ஏவிவிட்டனர். அந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்தே நிலைமை கலவரமாக மாறியது. எனவே, அமைதியான போராட்டத்தைச் சிதைத்து, அதனை வன்முறையாக மாற்றியவர்கள் யார் என்பது குறித்துத்தான் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள் தன்னிச்சையாக வீதிக்கு இறங்கிப் போராடினார்கள். அதனை வெளிநாட்டுச் சதி என்று கூறுவது ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் அவமதிக்கும் செயலாகும். தமது அரசியல் தோல்விகளை மறைக்கவே இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் குறித்து எமது அரசு முறையான விசாரணைகளை முன்னெடுக்கும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்துவோம்.” - என்றார்.

## 13ஆம் திருத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டுள்ள நெருக்கமான உறவை வெளிப்படுத்துகிணத்து என்று கூறப்படுகின்றது.

13 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் மற்றும் அதன் அடிப்படையில் இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து இந்தப் பயணத்தின் போது விரிவாக விவாதிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இந்தியாவுக்கு தமது முதலாவது அதிகாரபூர்வ பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்திய கலாசார உறவுகளுக்கான நிலையத்தின் அழைப்பின் பேரில் கடந்த 5ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை அவரின் இந்த இந்திய விஜயம் அமைந்திருந்தது.

இதன்போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பவன் கபூர் ஆகியோரை ரில்வின் சில்வா உள்ளிட்ட குழுவினர் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, 13 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் மற்றும் அதன் அடிப்படையில் இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக அரசியல் தரப்புகள் தெரிவிக்கின்றன.

இது இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில் மிக முக்கியமான நகர்வாகும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நலத்திட்டங்கள் குறித்து இதன்போது ஆலோசிக்கப்பட்டுள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“அயலவருக்கு முதலிடம்” மற்றும் “மஹாசாகர்” தொலை நோக்குப் பார்வையின் கீழ் இலங்கைக்கான இந்தியாவின் ஆதரவு இங்கு உறுதிப்படுத்தப்பட்டது என்றும் அந்தஅறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்திய – பாகிஸ்தான் மோதல் இன்று மாலை நடைபெற இருக்கின்றது.

அதற்காக இருதரப்பு ஆதரவாளர்களும் பல்லாயிரக்கணக்கில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. பதற்றம் மிகுந்த இந்த ஆட்டத்தையொட்டி பாதுகாப்பு பிரச்சினை அதிகம் இருப்பதாகப் பாதுகாப்புத் தரப்பினர் கருதுகின்றனர்.

அதனால் கடுமையான உடற் பரிசோதனைகள், பாதுகாப்பு கெடுபிடிகளுடனேயே ரசிகர்கள் மைதானத்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனால் மைதானத்துக்கு வந்து சேரும் பார்வையாளர்களை சோதனை இட்டு அவரவர் இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு பெரும் இழுபறியும் நேரமும் செலவாகும் என எதிர்வு கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்திலேயே ஆட்டம் ஆரம்பமாவதற்கு நான்கு மணி நேரத்துக்கு முன்னரே மைதானத்துக்கு வந்து சேரும்படி பொலிஸ் தரப்பு ரசிகர்களை அறிவுறுத்தி இருக்கிறது.

பெரும் பணம் கொடுத்து கறுப்புச் சந்தையில் டிக்கெட் வாங்கி நேரத்துடன் போய் அதிகம் அவலப்படுவதிலும் பார்க்க, வீட்டில் இருந்து தொலைக் காட்சியில்– 'ரீப்ளே' வசதியுடன் ஆட்டத்தை கண்டு களிப்பது மேலானது என்கிறார் நம் நண்பர் ஒருவர்.

* * *

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அதிலிருந்து பிரிந்து உருவான ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் பிரமுகர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று நேற்றுக் கொலன்னாவைப் பிரதேசத்தில் நடைபெற்று இருப்பதாகத் தெரிகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இரண்டு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இரண்டு கட்சிகளின் தலைவர்களும் – ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் – இரண்டு கட்சிகளின் இணைவுக்கும் தயாராகி விட்டனரா என்பது தெரியவில்லை. ஆனால் கீழ் மட்டத்தில் இரண்டு கட்சிகளின் முக்கிய பிரமுகர்களும் இரு கட்சி இணைவுக்கான நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் என்பது மட்டும் நிச்சயம்.

* * *

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு எதிராக அவரை அபகீர்த்திக்கு உட்படுத்தும் செய்திகளை வெளியிடவும், பிரசுரிக்கவும், ஒளிபரப்பவும், ஒலிபரப்பவும் தடைவித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இடைக்காலத் தடையாணை ஒன்றை சில ஊடக நிறுவனங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும், சமூக ஊடகங்கள் ஊடாகப் பிரசாரம் செய்யும் தனியாருக்கும் எதிராக நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளது என்பதை நேற்று என் பத்தியில் கோடி காட்டி இருந்தேன்.

சம்பந்தப்பட்ட இடைக்காலத் தடையானை நீதிமன்றத்தினால் தங்களிடம் நேரடியாக கையளிக்கப்படுவதற்கு முன்னர் இரா. சணக்கியனுக்கு எதிரான கருத்துக்களை – பிரசாரங்களை – தகவல்களை – அவதூறு படுத்தும் செய்திகளை – விழுந்தடித்து ஒலி, ஒளி பரப்புவதற்கு, தடையானைக்கு உள்ளான சில ஊடகங்கள் தீர்மானித்து செயல்பட தொடங்கியுள்ளன என்று கூறப்படுகின்றது.

இதனை அடுத்து, சம்பந்தப்பட்ட உத்தரவை நீதிமன்றம் பகிரங்க அமர்வில் வெளியிட்ட பின்னர் அது பற்றிய தகவல் தங்களுக்கு கிடைக்கவில்லை என்ற சாக்குப் போக்கை முன்னிறுத்தி, சாணக்கியனைப் போட்டுத் தாக்கும் வேலையை முன்னெடுப்பதும் சட்ட விரோதம் என்று தெரிவித்து, அந்தப் போக்கை உடனடியாக நிறுத்தும் படி சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனங்களுக்கு எழுத்தில் அறிவித்திருக்கின்றது சாணக்கியனின் சட்டத்தரணிகள் தரப்பு.

சம்பந்தப்பட்ட சட்டத்தரணிகளின் கடிதத்தின் மூலமான அறிவுறுத்தல் கிடைத்த பின்னரும் நீதிமன்றத்தின் இடைக்கால தடை ஆணையை மீறும் விதமாக ஊடக நிறுவனங்கள் செயற்பட்டால் அவை அதற்காக நீதிமன்ற அவமதிப்பு குற்றத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று தெரிகின்றது.

* * *

கிளிநொச்சியில் நேற்று இரண்டு நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. ஒன்று 'ஈழ தேசத்தின் பாசக் குரலுக்கான ஆதரவு போராட்டம்' என்ற பெயரில் சிறிதரன் எம்.பிக்கு ஆதரவான சிலர் கிளிநொச்சி பொது ஒன்றியங்களில் பெயரில் நடத்திய கூட்டம். ஆயினும், தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள், உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் போன்றோர் இக்கூட்டத்திற்கு வருகை தரவில்லை. கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக பகிரங்க வெளியில் செயற்படுபவர்கள் தொடர்பில் கட்சி தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் அறிவித்திருந்த பின்னணியில், நேற்றைய கிளிநொச்சிக் கூட்டத்தில் பெரிய எண்ணிக்கையில் மக்கள் பங்குபற்றவில்லை. 100 பேருக்கு முன், பின்னாக ஆள்கள் வந்திருந்தார்கள். ஏற்கனவே கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கூட்டத்தில் பங்கு பற்றினார் என்று தெரிகிறது.

அதே சமயம் கிளிநொச்சியில் இன்னொரு கூட்டத்தை கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் நடத்தினார் எனத் தெரிகிறது. சுமார் 150 க்கு மேற்பட்ட முன்னாள் போராளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டம் கனகாத்திரமாக – விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கும் சுமந்திரனுக்கும் இடையேயான முரண்நிலைகளைக் களைந்து புரிதல் ஏற்படுத்தத் தக்க விதத்தில் – கருத்து பரிமாற்றங்களுடன் நடைபெற்று முடிந்ததாக தெரிகிறது. ஆரோக்கியமான – அர்த்தமுள்ள – கலந்துரையாடலாக அது நடைபெற்றதாகக் கூறப்பட்டது.

அதேசமயம் நேற்று கிளிநொச்சியில் சிறிதரனுக்கு ஆதரவாகக் கூட்டம் நடத்தியவர்கள், அந்த கூட்டத்தின் முடிவில் கண்டன அறிக்கை ஒன்றையும் வெளியிட்டு இருக்கின்றனர். அந்த அறிக்கையோடு அந்த நிகழ்வை ஏற்பாடு செய்த சிலர் யாழ்ப்பாணம் வந்து, மார்ட்டின் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனைச் சந்தித்துள்ளார்கள். அவர்களுக்கு, சிறிதரனைக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் பதவியில் இருந்து வெளியேற்றும் சூழ்நிலை ஏன் ஏற்பட்டது என்பதற்கான காரணங்களையும் விளக்கங்களையும் சுமந்திரன் தெளிவுபடுத்தினார் எனவும் அறிய வந்தது.

## எஸ்.கே.விக்னேஸ்வரனின் மூன்று நூல்கள் வெளியீடு

சமூக, அரசியல் செயற்பாட்டாளரும் எழுத்தாளருமான எஸ்.கே.விக்னேஸ்வரனின் மூன்று நூல்களின் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் சமூக ஆய்வாளர் தெட்சணாமூர்த்தி மதுசூதனன் தலைமையில் நடைபெற விருக்கிறது.

"பனி இளகிய பகல்" என்ற சிறுகதை தொகுப்பு நூலை அம்பிகா டிவகலாலவும், "நூல் அறிமுகங்களும் அனுபவக் குறிப்பும்" என்ற நூலை ரக்சானா ஷரிபுத்தீனும் "தெறிவினைக் குறிப்புக்கள்" (அரசியல் பத்திக் குறிப்புகள்) என்ற நூலை சட்டத்தரணி நடராஜர் காண்டீபனும் மதிப்பாய்வு செய்வர்.

# உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு பொருத்தமான விலை கிடைப்பதில்லை

சந்தையில் வெளிநாட்டு உருளைக்கிழங்கு குறைந்த விலைக்குக் கிடைப்பதன் காரணமாக, உள்நாட்டு உருளைக்கிழங்கு விவசாயிகளுக்குப் பொருத்தமான விலை கிடைப்பதில்லை என கெப்பட்டிபொல பொருளாதார மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் மஹிந்த பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

தற்போது உள்நாட்டு உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், அடுத்த வாரமாகும் போது சந்தைக்கு அதிகளவிலான உருளைக்கிழங்கு கையிருப்பு கிடைக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு நியாயமான விலையைப் பெற்றுக்கொடுப்பதாயின், வெளிநாட்டு உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரியை இந்தத் தருணத்தில் அதிகரிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.






நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சலுகை பெறும் தகுதி

பொருளாதார ரீதியில் பெரிதும் நலிவுற்று, பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் இலங்கைக்கு, அதன் மீட்சிக்கு ஏற்றுமதித் துறை மிக முக்கியமானது.

இலங்கையிலிருந்து தைத்த ஆடைகள் உட்பட பல பொருள்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு விசேட வரிச் சலுகையுடன் ஏற்றுமதி செய்வதற்கான (ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை) வாய்ப்பை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி இருக்கின்றது. நாட்டின் பொருளாதார மீட்சிக்கும் அந்நிய செலாவணி ஈட்டலுக்கும் இலங்கைக்கு வழங்கப்பட்ட இந்த விசேட சலுகை பேருதவியாக அமைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு விசேடமாக அளித்துள்ள இந்தச் சலுகை வழங்கல் சுழற்சி முடிவடையும் காலத்தில் இலங்கை இப்போது உள்ளது. மீண்டும் இந்த சலுகை கிடைத்தால் மட்டுமே இலங்கை தான் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து சற்று மீண்டு மூச்சு விடக் கூடியதாக இருக்கும்.

இந்தப் பின்புலத்தில் ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை கூட்டு ஆணைக் குழுவின் 27 ஆவது கூட்டம் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜ மற்றும் ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார சேவைப் பிரிவின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பதில் முகாமைத்துவப் பணிப்பாளர் பாவோலா பம்பலோனி ஆகியோரின் இணைத் தலைமையில் இக்கூட்டம் இடம் பெற்றது.

இந்த வரிச் சலுகை வசதியை ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை தொடர்ந்து பெற்றுக் கொள்வதாயின் தற்போதைய ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை வழங்கல் ஒப்பந்தத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாக்குறுதிகளை உரிய காலப்பகுதிக்குள் இலங்கை நிறைவேற்ற வேண்டிய அவசியத்தை ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் இந்த கூட்டத்தில் வலியுறுத்திச் சுட்டி காட்டி இருக்கிறார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல், சிறுபான்மையினரின் உரிமைகள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள், இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் என்பன உள்ளடங்கலாக ஜனநாயகம், நிர்வாகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் ஆகிய துறைகளில் இலங்கை உரிய முன்னேற்றங்களைக் காட்டினால் மட்டுமே இந்தச்சலுகை இலங்கைக்கு மீண்டும் - தொடர்ந்தும் - கிட்டும் என்பது தெளிவானது.

இந்த வரிச் சலுகையை தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தத் தக்க விதத்தில் இந்த விடயங்களில் உரிய முன்னேற்றங்களை நாடு காட்டியுள்ளதா என்பதை ஆட்சியாளர்கள் தங்கள் மனதைத் தொட்டுக் கேட்டுக் கொள்வது நல்லது. அப்படி இல்லாமல் தொடர்ந்தும் இந்தச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியத்திடம் நாடு கோருவது எங்ஙனம் என்பது குறித்து அவர்களே ஒரு முடிவு எடுக்க வேண்டும்.




# அலுவலகங்களுக்குள் முடங்கிக் கிடக்காமல் அனைவரும் கிராமங்களுக்குச் செல்லுங்கள்!

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் கடும் உத்தரவு

"2026ஆம் ஆண்டு அபிவிருத்திக்குரிய ஆண்டு. எனவே, அதிகாரிகள் "அபிவிருத்தி நிர்வாகத்தை" முன்னெடுக்கத் தயாராக வேண்டும். சாதாரண நிர்வாகத்தைப் போன்று அல்லாது, அபிவிருத்தி நிர்வாகத்தை முன்னெடுப்பதற்குத் துரித முடிவெடுக்கும் ஆற்றலும், வேலையின் மீதான அர்ப்பணிப்பும் மிக அவசியம். இந்தக் கொள்கையுடன் அனைவரும் எம்மோடு இணைந்து பயணிக்க வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடனான விசேட கலந்துரையாடல், நேற்று சனிக்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் ஆளுநர் வழங்கிய முக்கிய பணிப்புரைகள் வருமாறு:–

"கடந்த 2025ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் பின்னூட்டங்கள் பெறப்பட்டு, அவை நிதி ஆணைக்குழு மற்றும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடந்த ஆண்டில் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு, இந்த ஆண்டுக்கான திட்டங்களைக் கையாள வேண்டும்.

2026ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் மதிப்பீட்டுப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழான திணைக்களங்கள் ஏற்கனவே கேள்வி கோரல்களைப் பிரசுரித்துள்ளமை பாராட்டத்தக்கது. ஏனைய அமைச்சுக்களும் இச்செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில், ஒப்பந்தகாரர்களின் வேலைத்தரம் குறித்துப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. எனவே, இனிவரும் காலங்களில் தரம் குறைந்த வேலைகளைச் செய்யும் ஒப்பந்தகாரர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான அல்லது நிராகரிப்பதற்கான முறையான பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும்.

அலுவலகங்களுக்குள் மட்டும் முடங்கி இருக்காது, ஒவ்வொரு அமைச்சும் ஒவ்வொரு மாதமும் மாகாணத்தின் ஏதாவது ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து, அங்கு நேரடியாகச் சென்று மக்களின் தேவைகளை அடையாளப்படுத்தி, அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். இதற்கெனத் தனியானதொரு பொறிமுறையை அமைச்சுக்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

திணைக்களங்களைக் கண்காணிப்பதற்காக, ஒவ்வொரு அமைச்சின் செயலாளர்கள் ஊடாகவும் அமைக்கப்பட்ட "பறக்கும் படை" மேலும் வினைத்திறனாகச் செயற்பட வேண்டும். அரச அலுவலர்களின் நேர முகாமைத்துவம் மற்றும் சேவை வழங்கல் குறித்துப் பொதுமக்களிடமிருந்து எனக்குப் பல நேரடி முறைப்பாடுகள் வருகின்றன. பறக்கும் படை துடிப்பாகச் செயற்பட்டால் இத்தகைய குறைபாடுகளைத் தவிர்க்க முடியும்.

சில உள்ளூராட்சி மன்றங்களில் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு இடையில் சுமூகமான உறவு இல்லாத நிலை காணப்படுகின்றது. இரு தரப்பிலிருந்தும் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் வருகின்றன. இது தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்தித் தீர்வு காணப்படும்.

இவ்வருடம் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதால், மேலதிக வேலைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான ஆயத்தங்களை இப்போதே மேற்கொள்ள வேண்டும். அதேவேளை, வழமையான வேலைத்திட்டங்களை விரைவாக நிறைவு செய்து, அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும்."–என்றும்ஆளுநர்சுட்டிக்காட்டினார்.

அடுத்த மாதம் முதல் ஒவ்வொரு அமைச்சினதும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் தனித்தனியாக நடைபெறும் எனவும் இதன்போது அறிவிக்கப்பட்டது.







# மகா சிவராத்திரி: இறைவனோடு இணையும் புண்ணிய இரவு...!

இந்து தர்மத்தில் சிவபெருமானைப் போற்றும் மிக உயரிய விரதமாக மகா சிவராத்திரி கருதப்படுகிறது. அறியாமை எனும் இருளை நீக்கி, ஞானம் எனும் ஒளியைப் பெறும் நோக்கில் இந்த இரவு முழுவதும் விழித்திருந்து இறைவனை வழிபடுவது வழக்கம்.

சிவராத்திரி உருவானதற்குப் பல்வேறு புராணக் கதைகள் கூறப்படுகின்றன.

லிங்கோத்பவர் – பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் இடையில் ”யார் பெரியவர் என்ற போட்டி வந்தபோது, சிவபெருமான் பெரும் ஜோதிப் பிழம்பாகத் தோன்றி நின்ற நாள் இது எனக் கருதப்படுகிறது.

ஆல கால விஷம் – பாற்கடலைக் கடைந்த போது வெளிப்பட்ட நஞ்சை, உலகைக் காக்க சிவன் அருந்திய இரவு இது. அந்த விஷம் தொண்டையிலேயே தங்கிவிட, அவர் மயக்கமடையாமல் இருக்கத் தேவர்கள் இரவு முழுவதும் விழித்திருந்து துதித்ததாகக் கூறப்படுகிறது.

சிவராத்திரி விரதம் இருப்பவர்கள் அதிகாலை முதலே உணவின்றி (உபவாசம்) இருப்பார்கள்.

இரவு முழுவதும் நான்கு காலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு காலத்திலும் சிவனுக்குப் பால், தேன், இளநீர் போன்ற திரவியங்களால் அபிஷேகம் செய்யப்படும்.

இரவு முழுவதும் தூங்காமல் சிவபுராணம் வாசித்தல், பக்திப் பாடல்கள் பாடுதல் அல்லது “ஓம் நமச்சிவாய” என்ற மந்திரத்தை ஓதுதல் மூலம் மனதை ஒருநிலைப்படுத்துவர்.

சிவனுக்கு மிகவும் பிடித்தமான வில்வ இலைகளால் அர்ச்சனை செய்வது பெரும் புண்ணியத்தைத் தரும் என்பது நம்பிக்கை.

மகா சிவராத்திரி வெறும் சடங்கு மட்டுமல்ல, அதற்குப் பின்னாலுள்ள தத்துவம் ஆழமானது. இரவு என்பது அறியாமை மற்றும் அகங்காரத்தைக் குறிக்கிறது. விழித்திருப்பது என்பது விழிப்புணர்வுடன் இருப்பதைக் குறிக்கிறது. உலகியல் ஆசைகளில் இருந்து விலகி, ஆன்மாவை இறைவனுடன் இணைக்கும் முயற்சியே இந்த

தொடர்ச்சி▼

# மகா சிவராத்திரி: இறைவனோடு இணையும் புண்ணிய இரவு...!

தொடர்ச்சி▲

விரதத்தின் சாரமாகும்.

தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற வாக்குக்கு இணங்க, சிவராத்திரி அன்று தூய்மையான மனதோடு விரதம் இருப்பவர்களுக்கு மன அமைதியும், நல்வாழ்வும் கிட்டும் என்பது உறுதி. இது தனி மனிதனின் ஆன்மீகப் பயணத்தில் ஒரு மிகமுக்கியமான மைல்கல்லாகும்.

சிவராத்திரி விரதம் என்பது உடல், மனம் மற்றும் ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மைப்படுத்தும் ஒரு செயலாகும். இதனைச் சரியாகக் கடைபிடிக்க கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றலாம்

1. விரதத் தொடக்கம் (அதிகாலை) – சிவராத்திரி அன்று அதிகாலையிலேயே எழுந்து நீராடி, நெற்றியில் திருநீறு அணிந்து சிவனை தியானிக்க வேண்டும். அன்றைய தினம் முழுவதும் உணவைத் தவிர்த்து உபவாசம் இருப்பது சிறப்பு. உடல்நிலை அனுமதிக்காதவர்கள் பால், பழங்கள் மட்டும் உட்கொள்ளலாம்.

2. நான்கு காலப் பூசைகள் (இரவு முழுவதும்) – சிவராத்திரி இரவை நான்கு ஜாமங்களாகப் பிரித்து வழிபாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு காலத்துக்கும் தனித்தனி பலன்கள் உண்டு:

முதலாம் காலம் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை பால் அபிசேகம் செய்வது செல்வம் பெருகும்.நிம்மதி கிடைக்கும்.

இரண்டாம் காலம் – இரவு 9 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணிவரை தயிர் அபிசேகத்துக்குக் கொடுத்தால் ஆரோக்கியம் கிட்டும்.

மூன்றாம் காலம் – நள்ளிரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 3 மணி வரை. நெய் வழங்கினால் ஞானம் மற்றும் முக்தி கிடைக்கும்.

நான்காம் காலம் – அதிகாலை 3 மணி தொடக்கம் காலை 6 மணிவரை. பூசைக்குத் தேன் வழங்கினால் அனைத்துப் பாவங்களும் நீங்கும்.

3. மந்திரங்களும் பாராயணமும் ஓதி இரவு முழுவதும் ஓம் நமச்சிவாய எனும் பஞ்சாட்சர மந்திரத்தை இடைவிடாது ஜபிப்பது மிகச்சிறந்த பலனைத் தரும். சிவபுராணம், திருவாசகம், தேவாரம் மற்றும் லிங்காஷ்டகம் போன்ற பதிகங்களைப் பாடுவது மனதுக்கு அமைதியையும் இறை உணர்வையும் அளிக்கும்.

4. வில்வத்தின் சிறப்பு – சிவராத்திரி வழிபாட்டில் வில்வ இலைகளுக்குத் தனி இடம் உண்டு. மூன்று இதழ்களைக் கொண்ட ஒரு வில்வ இலை சிவபெருமானின் மூன்று கண்களாகவும், முக்குணங்களாகவும் கருதப்படுகிறது. ஒரு வில்வ இலையைக் கொண்டு அர்ச்சனை செய்வது கோடி புண்ணியங்களுக்குச் சமம் என்பது நம்பிக்கை.

5. விரதத்தை நிறைவு செய்தல் – நாளை அதிகாலை நீராடி, இறைவனை வழிபட்டு தான தர்மங்கள் செய்வது நல்லது. சிவபிரசாதத்தை உட்கொண்டு முறைப்படி விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். பகல் முழுவதும் தூங்காமல் இருப்பது விரதத்தின் முழுப் பயனையும் தரும்.

சிவராத்திரி வழிபாட்டில் மிக முக்கியமானது அர்ப்பணிப்பு. ஆடம்பரமான பூசைகளை விட, தூய்மையான பக்தியுடன் சிவனை நினைப்பதே. அவரை அடைவதற்கான எளிய வழி சிவனை நினைந்திருந்து பக்திப் பரவசத்தில் ஆழ்ந்திருப்பதே.



# தேடுவார் தேடினால் தெரிவான் இறைவன்...!





மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

ஆதியு மில்லா அந்தமு மில்லா
சோதியாய் சுடராய் இருப்பது இறையே
வாதிட முடியா வண்ணமா யிருப்பது
ஆதியா யிருக்கும் அரும் பொருளாகும்

ஆணவ மிருப்பார் காணவு மாட்டா
அஞ்ஞான மில்லா மெஞ்ஞானப் பொருளே
வாய்மையும் தூய்மையும் வாய்த்த நற்பொருளே
விண்ணாய் மண்ணாய் வியாபிக்கும் பொருளே

அப்பொருள் சிவனே அதுவே முதலே
எப்பொரு ளுள்ளும் இருப்பது மதுவே
நிற்பதும் நடப்பதும் நினைத்திடு மனைத்தும்
நிறைந்திடு பொருளாய் இருப்பது சிவமே

சிவனை நினைவார் சிந்தை சிறக்கும்
சிந்தை சிறந்தால் சிவனே தெரிவார்
சிவனை நினைக்கச் சிவ ராத்திரியே
சிறப்புடை நாளாய் அமைந்துமே இருக்கு

புராணக் கதைகளைத் புறந்தள்ள வேண்டாம்
புத்தியைப் புகட்டும் அத்தனை கருக்கள்
விளங்கா உண்மையை விளக்கிட வந்த
விளக்கே அவையென விளங்கினால் நலனே

அறிவியல் அனைத்தும் அமைந்தது சமயம்
அஞ்ஞான நிலையில் விளங்குதல் அரிது
இறையின் தத்துவம் இயற்பியல் தத்துவம்
எல்லாம் சிவ ராத்திரி மகத்துவம்

மனத்தை ஒடுக்கினால் மர்மம் விலகும்
மர்மம் விலக வைப்பதே நோன்பு
பரம் பொருளாகிய சிவனைப் பரவி
பக்தியால் நோற்றால் பக்குவம் கிடைக்கும்

மாலொடு அயனும் அடிமுடி தேடிய
கதையைக் கருத்தில் இருத்திட வேண்டும்
அடிமுடி காணா அலைந்ததன் காரணம்
அகத்தை என்பதே அடிப்படை அன்றோ

தேடுவார் தேடினால் தெரிவான் இறைவன்
தெளிவுடன் இருந்தால் தரிசனம் தருவான்
இதுவே சிவனின் ராத்திரி தத்துவம்
தனித்து விழித்து பசியுடன் இருப்போம்

நம்பிக் கைவைத்தால் நல்லதே கிடைக்கும்
நம்பிக்கை யென்பதே நல்லதோர் மந்திரம்
நமச்சிவாய நமைக் காக்கும் மந்திரம்
சொல்லுவோம் மந்திரம் வெல்லுவோம் பகையை!

# மத நல்லிணக்கம், மற்றும் சுமூகமான பிணைப்பு நாட்டின் என்றும் நிலைத்திருக்கும் சொத்துக்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சிவராத்திரி தினச் செய்தியில் தெரிவிப்பு

அந்நியோன்ய மரியாதை, மத நல்லிணக்கம், மற்றும் சுமூகமான பிணைப்பு நமது நாட்டின் என்றும் நிலைத்திருக்கும் சொத்துக்களாகும். மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு, இலங்கையிலும் உலகம் முழுவதும் வாழும் சகோதர இந்து பக்தர்களுக்கு என்னால் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள முடிந்தமை பெரும் மகிழ்ச்சியாகும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அனுப்பிவைத்துள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மகா சிவராத்திரி என்பது இருளுக்கு மத்தியில் ஞான ஒளியைத் தேடிச் செல்லும் ஆன்மீகப் பயணமாகும். அது பூஜை, பக்தி மற்றும் தியானத்தின் மூலம் மனதைச் சுத்தப்படுத்தி, அநீதி, அவிசுவாசம் மற்றும் அகங்காரம் என்பவற்றை களைய வழியைக் காட்டும் உன்னத இரவாகக் கருதப்படுகிறது.

சிவபெருமானை வணங்கினால் மோட்சம் உதயமாகும். ஆகையால்,



மகா சிவராத்திரி தினம், வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளும் போது பின்வாங்காமல், ஆத்ம விசுவாசத்துடன் புதிய தொடக்கத்துக்காக எழுந்திருக்க வேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

மகா சிவராத்திரி நாளில் உண்மை, நீதி, நியாயம் மற்றும் கருணை ஆகிய மதிப்புகள் நமது வாழ்வின் அடிப்படையாக இருக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது. அநீதிக்கு எதிராக உண்மை வெல்லும், அவிசுவாசத்தை விட ஒற்றுமை வலிமையானது, இருளை விட ஒளி வலுவானது என்பதை இந்த உன்னத நாள் நமக்கு உணர்த்துகிறது.

நமது நாடு இன்று எதிர்கொள்ளும் பொருளாதார, சமூக சவால்களுக்கு மத்தியில், மகா சிவராத்திரி தினம் நமக்கு புதிய நம்பிக்கைகளைக் கொண்டு வந்து தருகின்றன. இருளை நீக்கி ஒளியைப் பிரகாசிக்கச் செய்வது போல், நாமும் நாடாக முகம் கொடுக்கும் சவால்களுக்கு மத்தியில் வலுவான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்பதில் நம்பிக்கை கொள்வோம். அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அந்நியோன்ய மரியாதை, மத நல்லிணக்கம், மற்றும் நம்மத்தியிலான சுமூகமான பிணைப்பு நமது நாட்டின் என்றும் நிலைத்திருக்கும் சொத்துக்களாகும் என்பதை நினைவில் கொள்வோம்.

ஆகவே, இன்று சிவராத்திரி நாளைக் கொண்டாடும் வேளையில், நம் இதயங்களில் பிரகாசிக்கும் ஒளிக்கீற்று நாடு முழுவதும் பரவி, அமைதியும், ஒற்றுமையும், செழிப்பும் நிறைந்த இலங்கையை உருவாக்குவதற்கு வழி வகுக்கட்டும் என்று நாம் அனைவரும் பிரார்த்திப்போம்.- என்றுள்ளது.



# உடப்பில் கடல் அரிப்பால் ஆபத்து!

(உடப்பு நிருபர்: க.மகாதேவன்)

புத்தளம் ,உடப்பு 6 ஆம் வட்டாரப் பகுதியின் கடலோரம் நேற்றுப் பாரிய கடலரிப்பை எதிர்நோக்கியது. இந்தப் பகுதியில் சுமார் 25 மீன் வாடிகள் காணப்படுகின்றன. இவற்றில் பல வாடிகள் கடலரிப்புக் காரணமாகக் கடலினுள் ஆக்கிரமித்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

கடலோரத்தில் வசித்து வந்த ஒருவரின் வீட்டிலுள்ள மலசல கூடம் நேற்றுக் கடலரிப்புக்கு உள்ளாகி உடைந்துள்ளது. வாடிகள் சிதைந்து கடலினுள் சென்றுள்ளன. கடல் நேற்று இரவு எவ்வேளையிலும் ஊடறுத்து பாதையைக. கடக்கும் துரதிஷ்ட நிலைஏற்படக்கூடும் என இப்பகுதி மக்கள் அஞ்சும் நிலைமை நேற்று நீடித்தது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப். பைசல் நிலைமையை நேற்ற. நேரில் வந்து பார்வையிட்டார்.

இந்த கடலரிப்பை தடுப்பதற்கு அரசாங்கம் மிகவிரைவில் ப்கற்கள் போட்டு உதவி செய்ய வேண்டும் என

உடப்பு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.







# பெரியவிளாத்திக்குளத்தின் புல்மோட்டைவெளியில் அணைக்கட்டு, நீர்ப்பாசன வாய்க்காலை அமைக்குக!

## விரைந்து நடவடிக்கை மேற்கொள்க; ரவிகரன் எம்.பி. வலியுறுத்து









(விஜயரத்தினம் சரவணன்)

வவுனியா – ஓமந்தை கமநல சேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட பெரிய விளாத்திக்குளம் கமக்கார அமைப்பின் கீழ் காணப்படும் புல்மோட்டை வயல்வெளிக்குரிய அணைக்கட்டை அமைப்பதுடன், நீர்ப்பாசன வாய்க்கால் சீரமைப்பை மேற்கொள்ளுமாறும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் கூடியவிரைவில் உரிய திட்டங்களில் உள்வாங்கப்பட்டு புல்மோட்டை வெளிக்குரிய அணைக்கட்டை அமைக்கவும், நீர்ப்பாசன வாய்க்காலைச் சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென வவுனியா பிரதேச செயலாளர் மற்றும் ஓமந்தை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரால் பதில் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போதே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதுதொடர்பில் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

ஓமந்தை கமநல சேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட பெரியவிளாத்திக்குளம் கமக்கார அமைப்பின் கீழுள்ள புல்மோட்டை வெளிக்கான அணைக்கட்டு அமைக்கவும், நீர்ப்பாசன வாய்க்காலை சீரமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேணடும்.

இது தொடர்பில் பெரியவிளாத்திக்குளம் கமக்கார்அமைப்பினரால் என்னிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் உரியவர்கள் கவனஞ்செலுத்தவேண்டும். – வலியுறுத்தினார்.

இந்த அணைக்கட்டு அமைப்பது தொடர்பாகவோ, நீர்ப்பாசன வாய்க்காலை அமைப்பது தொடர்பிலோ தமக்கு எவ்வித கோரிக்கைகளும் கிடைக்கவில்லை என இதன்போது பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு குறித்த அணைக்கட்டு மற்றும் வாய்க்காலை அமைக்க வேண்டிய தேவை இருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஓமந்தை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், எனினும் கமக்கார அமைப்புக்களால் தம்மிடம் கோரிக்கை முன்வைக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் –

கமக்கார அமைப்பு தங்களிடம் கோரிக்கை முன்வைக்காவிட்டாலும் என்னிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். எனவே இந்த புல்மோட்டை வெளிக்குரிய அணைக்கட்டையும், நீர்ப்பாசன வாய்க்காலையும் அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென வலியுறுத்தினார்.

அதற்கமைய உரிய திட்டங்களானூடாக உள்வாங்கி மிகவிரைவாக இந்த அணைக்கட்டு, நீர்ப்பாசன வாய்க்கால் என்பவற்றை அமைப்பதற்கு தம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென வவுனியா பிரதேசசெயலாளர் மற்றும் ஓமந்தை கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரால் பதிலளிக்கப்பட்டது.

# புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவில் காணி மோசடிகள் தொடர்பில் விசாரணைகள்!

(ந.லோகதயாளன்)

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த காலங்களில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் காணி மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த காலத்தில் காணி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கையில் வேண்டுமென்றே திட்டமிடப்பட்டு மோசடி மேற்கொள்ளப்பட்டன என 2023 இறுதியில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் கலந்து கொண்ட காணி நடமாடும் சேவையில் முறையிடப்பட்டது.

இதனை ஆராய விசாரணைக் குழு அமைத்த மாவட்ட அரச அதிபர் அதன் அறிக்கையை வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்தார். அறிக்கையில் கண்டுகொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்து மேலதிக நடவடிக்கை எடுக்கும் வகையில் விசாரணை அறிக்கை அமைச்சிற்கு ஆளுநரால அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த அறிக்கை தொடர்பில் தற்போது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள புலனாய்வு அலகின் அதிகாரிகள் முல்லைத்தீவிற்கு வருகை தந்து விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

விசாரணைகளிற்காக தேர்வு செய்யப்பட்ட 3 காணி விநியோக விசாரணைகளில் இதேபோன்று மேலும் சில காணிகள் மோசடியாக விநியோகித்தமை தொடர்பான ஆதாரங்களும் சிக்கியுள்ளன எனக் கூறப்படுகின்றது.

இந்த மோசடி தொடர்பில் மூன்று அதிகாரிகளும், ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இனம் காணப்பட்டே விசாரணைகள் இடம்பெற்றாலும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரை நேரடியாக விசாரணைக்கு உட்படுத்தும் அதிகாரம் இக் குழுவிற்கு இல்லை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.



# திருகோணமலை பட்டணத்தெருப் பகுதியை கடலரிப்பிலிருந்து மீட்கும் புனரமைப்புப் பணி





**(ஏ.எச்.ஹஸ்பர்)**

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பட்டணத்தெரு பகுதி அண்மையில் கடலரிப்பு மூலமாக மிகவும் பாதிக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள பிள்ளையார் கோயில் ஒன்றும் கடலுக்கடியில் தாழ் இறங்கியுள்ளது.

இந்தக் கரையோரப் பகுதியைச் சீரமைத்துக் கடலரிப்பில் இருந்து பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை நேற்று திருகோணமலை மாநகர சபையினர், பட்டினத்தெரு மீனவர்கள், இளைஞர்கள் இணைந்து முன்னெடுத்தனர்.

இதனைப் பார்வையிட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், திருகோணமலை மாநகர சபை மேயர் கந்தசாமி செல்வராசா ஆகியோர் வந்திருந்தனர்.

இந்தக் கரையோர மக்களின் கடலரிப்பு பாதிப்பு தொடர்பில் மாநகர சபையின் விசேட சபை அமர்வின் போது பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற கால நிலையின் காரணமாக இந்தப் பகுதி மோசமான கடலரிப்பை எதிர்நோக்கியிருந்ததுடன் மீனவர்களும் இதனால் கடலுக்குச் செல்ல முடியாது பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் கரையோர பகுதி மீள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. இதில் மாநகர சபை உறுப்பினர் உதயகுமார் அஜித் குமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜவ்பர் இராஜினாமா ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் சுழற்சிக் கொள்கைப்படி



**(நூருல் ஹுதா உமர்)**

கொழும்பு மாநகர சபை உறுப்பினராக பதவி வகித்த ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் வண்ணாத்தி சின்ன முதன்மை வேட்பாளர் ஏ.எம்.ஜே. முஹம்மட் ஜவ்பர் தனது உறுப்பினர் பதவியிலிருந்து உத்தியோகபூர்வமாக ராஜினாமாச் செய்தார்.

2025 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் ஐக்கிய சமாதானகூட்டமைப்பின்சார்பில்வண்ணாத்தி சின்னத்தில் போட்டியிட்டு அதிக வாக்குகள் பெற்று மாநகர சபை உறுப்பினராக தெரிவான அவர், தனது ராஜினாமா கடிதத்தை கொழும்பு மாநகர சபை மேயர் விரை கல்லி பல்தாசர் அவர்களிடம் கையளித்துள்ளார்.

இது தொடர்பாக ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் கலீலுர் ரஹ்மான் தெரிவித்தவை வருமாறு:-

கட்சியின் கொள்கையின்படி அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளர்களுக்கு சுழற்சி முறையில் மாநகர சபை உறுப்பினர் பதவி வழங்குவது வழக்கமாக இருந்து வருகிறது. உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலேயே அல்ஹாஜ் ஜவ்பர் முன்கூட்டியே தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அவரது இடத்தை அடுத்து அதிக வாக்குகள் பெற்ற கொழும்பு வாழைத் தோட்டத்தைச் சேர்ந்த சகோதரர் பந்துல ரனவீர நிரப்பவுள்ளார். அவர் அடுத்த ஒரு வருட காலத்திற்கு மாநகர சபை உறுப்பினராக பதவியேற்று சேவையாற்ற உள்ளதார். – எனப் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# மக்களையும் தேசத்தையும் தேசியத்தையும் பாதுகாக்கவும் பேரவலத்திலிருந்து மீளவும் அவசர செயற்பாடு அவசியம்!

## அருட்தந்தை சத்திவேல் அழைப்பு

(பா.சதீசன்)

மக்களையும், தேசத்தையும், தேசியத்தையும் காக்கவும் எதிர்கால பேரவலத்திலிருந்து மீட்கவும் அவசர செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இறுதியாக வடக்கிற்கு சென்றபோது உடற்பயிற்சிக்கென பாதுகாவலலோடு வீதியில் நடந்து சென்றமையும், கடந்த 11ஆம் திகதி மலையகம் சென்றபோது மலையக தொழிலாளர்களை தேடி சென்று சந்தித்தமையும் தற்போது பேசு பொருளாகி உள்ளன. இவை இரண்டுமே திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட அரசியல் நாடகங்கள் எனலாம். இது கவர்ச்சி அரசியலில் மக்களை ஆக்கிரமிக்கும் நாடகம் எனலாம்.

இரண்டு சம்பவங்களிலும் நான் சாதாரணமானவன், எளிமையானவன், இனிமையானவன், மக்களுக்கு நெருக்கமானவன் எனும் தோற்றப்பாட்டை மக்களுக்குள் புகுத்தும் அரசியலில் ஜனாதிபதி வெற்றி பெற்றுள்ளார் என்றும் கூறலாம். இந்த நிகழ்வுகளுக்குப் பின்னால் திட்டமிட்ட ஆயத்த நடவடிக்கைகளும் நிறைவேறி உள்ளன.

மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ரூபா 400 சம்பள அதிகரிப்போடு மலையக மக்களை மலையேறி சந்தித்த வேளையில் பலர் செல்ஃபி எடுத்துக் கொள்ள பெரும் ஆர்வம் காட்டி, எடுத்து மகிழ்ந்தமையும், ஒரு பெண் தொழிலாளி "நீங்கள் 200 வருடம் வாழ வேண்டும்" என வாழ்த்தியமையும், இன்னும் ஒரு தாய் "நீங்கள் எங்கள் கடவுள்"என்றமையோடு, சாமிமலைத் தோட்டத்தில் தொழிலாளர்கள் ஜனாதிபதியின் உருவப்பட பதாகைக்கு பாலாபிசேகம் செய்தமையையும் சமூக ஊடகங்களில் காணலாம்.

ஜனாதிபதி கடந்த மாதம் பொங்கலுக்கு யாழ் வந்த போது தமிழ் கலாசாரத்துடன் வரவேற்கப்பட்டமையுடன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையையும், செல்பி எடுப்பதில் இளம் வாலிபர்கள் போட்டியிட்டம்சியையும், அவர் அருகில் இருப்பது பெரும் பாக்கியமாக கருதியமையையும் காணக் கூடியதாக இருந்தது.

தமிழர் தாயகமான வடக்கிலும், கிழக்கிலும், மலையகத் தமிழர் தேசத்திலும் ஜனாதிபதியினதும், தேசிய மக்கள் சக்தியினதும் அரசியல் கொடிகள் மட்டுமே பறக்க வேண்டும் என திட்டமிட்டு செயல்படுகின்றமையையும் எம்மால் உணர முடிகின்றத்ய். இதுவே கட்சி அரசியல். ஆனால் அதுவே தனிநபர் வழிப்பாடாகவும் தடம் பிறழ்ந்து செல்வதையும் நாம் அவதானிக்கின்றோம்.



வடக்கு, கிழக்கு மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினை இன்னும் தீர்வில்லாது தொடர்கிறது.இனப்படு கொலைக்கு – வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்குத் தீர்வில்லை. சிங்கள – பௌத்த பேரினவாதம் படையினர், தொல்லியல் திணைக்களத்தினர், பௌத்த பேரினவாதப் பிக்குகள் போன்ற தரப்புகள் நில ஆக்கிரமிப்பை தொடர்கின்றது. அரசியல் கைதிகளின் விடுதலைக்கு மக்களின் வீதிப் போராட்டம் நடக்கையில் அவற்றை திரும்பிப் பார்க்காமல் ஜனாதிபதிப் இருக்கின்றமையோடு யாழிலிருந்து முல்லைத்தீவு செல்லும்போது செம்மணிப் புதைகுழிப் பக்கம் பக்கம் தலை திருப்பாது சென்றார். அது மட்டுமல்ல, இது தொடர்பில் பொதுவெளியில் கருத்து தெரிவிக்க மறுத்துத் தமிழர் தாயகத்தில் தமது அரசியலை பலப்படுத்த முனைவது தமிழர்களைப் புறமொதுக்கி அவமானப்படுத்தும் செயலாகும். அதற்கு துணை நிற்பது அதனை விடவும் துரோகச் செயலாகும்.

அதே போன்று ஜனாதிபதி மலையகத்தில் தமது வாக்கு வங்கியை பலப்படுத்த நினைப்பதும், சிங்கள – பௌத்த தேசியவாத கருத்து நிலையோடு ஒன்றித்து மலையக மக்களை ஓர் தேசிய இனம் அங்கீகரிக்க மறுப்பதும், மலையக மக்கள் சமூகத்தின் இன அடையாளங்களை மதிக்க மறுப்பதும், அவர்கள் தமது இரத்தம் சிந்தி உருவாக்கிய மலையகம் எனும் தேசத்தில் இருநூறு வருடங்களை கடந்தும் நில உரிமை அற்ற மக்களாக வாழ வைத்திருப்பதும் ஏற்றுக் கொள்ள முடியாத அரசியல் நீதியாகும்.

இதனையும் பாதுகாத்துக் கொண்டு மலையக மக்களிடத்தில் சென்று தோளில் கைவைத்து, கட்டி அரவணைத்து செய்யும் அரசியலை என்னவென்பது?

"மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அரை அடிமைகளாகவே வைக்கப்பட்டுள்ளனர்" என 2022 ஆண்டளவில் இலங்கை வந்த ஐ.நா பிரதிநிதி ஒருவர் கூறிச் சென்றார். தற்போது டித்வா சூறாவளியின் பின்னர் நாட்டை கட்டியெழுப்புவதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதி கொடுத்துள்ள போதும் தற்போதைய அரசாங்கம் மலையக மக்களை சமூக ரீதியில் ஒடுக்கப்படுகின்றனர் என நாடாளுமன்ற பிரதிநிதி மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் ஐ.நா பிரதிநிதியிடம் முறையிட்டுள்ளனர். இத்தகைய அரசியல் பொருளாதார அவலத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் வந்து நின்று அரசியல் செய்யும் ஜனாதிபதியை என்னவென்பது? அதற்கு துணை நிற்பவர் யார் என்பது?

தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்களும், மலையக மக்களே உருவாக்கிய மலையகம் எனும் தேசத்தின் மக்களும் தத்தமது அரசியலில் இருந்து விலகி செல்கின்றமைக்கும், அரசியல் அறியாமை இருளுக்குள் சிக்கிக் கிடக்கின்றமைக்கும் தமிழ் அரசியல் தலைமைகளாக தம்மை காட்டிக் கொள்வோரும், தாமே அவர்களின் அரசியல் பிரதிநிதிகள் என மார் தட்டிக் கொள்வோருமே காரணமாவர். இதனை ஏற்றுக் கொள்வதற்கும் எந்த தமிழ் அரசியல்வாதிகளுக்கும் (ஒரு சிலரைத் தவிர) வேறு எவருக்கும் துணிவில்லை என்று கூறலாம்.

அதேபோன்று தமிழ் தேசிய கருத்துருவாக்கிகள் நாமே என அடையாளப்படுத்திக் கொள்வோர் மத்தியிலும் சிலர் ஊடகங்களில் தமது கட்டுரைகள் வருவதிலும், பொது மேடைகளில் உரையாற்றுவதிலும், ஊடக சந்திப்பு நடத்துவதிலும் சுய இன்பம் காணுகின்றமையைத் தவிர தமது எழுத்துக்கள் மக்களை சென்றடைகின்றனவா என்பது தொடர்பிலும் அறிவதில் ஆர்வமற்றும் உள்ளமை தமிழர் தேசிய அரசியலுக்கு அவலமாகும்.

இந்நிலையைத் தொடர விடுவது நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு சமமாகும். சிங்களப் பேரினவாதம் செய்யும் துரோக செயலில் நாமும் நம்மை அறியாமல் வேறு வடிவத்தில் துணை செய்கின்றோம் என்பதை கருத்தில் கொண்டு தமிழர் தேசமாக வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் தலைவர்கள் சிந்தித்து செயல் பட வேண்டுமெனவும் கேட்கின்றோம். அதனை வேறு வடிவங்களில் மக்கள் பயன்படுத்துவதும் கட்டாயமாகும்.

அதேபோன்று மலையக அரசியல் தலைமைத்துவங்களும் சலுகை அரசியல் போதுமென்ற இருள் நிலையினின்று விலகி மக்கள் அரசியலுக்காக ஓரணியில் நிற்க வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

அது மட்டுமல்ல வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் தமிழ் தலைமைகளும் மலையக அரசியல் தலைமைத்துவங்களும் தம் தம் தனித்துவ தேசிய அரசியல் நிலைப்பாட்டினின்று விலகாது தமிழர்களின் தேசிய அரசியலுக்காக சார்பு நிலை எடுத்து நாடாளுமன்றிலும் அதற்கு வெளியிலும் பொது மேடையில் ஒன்று பட வேண்டுமெனவும் கேட்கின்றோம்.

ஏனெனில் தற்போதைய தேசிய மக்கள் சக்தி முன்னைய ஆட்சியாளர்களை விட சிங்கள – பௌத்த கருத்தியலுக்குள் பலமாக நின்று தமிழர்களின் அரசியலையும் தேசியத்தையும் தேசிய அடையாளங்களையும் அழிக்கவும் எம் மக்களை மயக்க அரசியலுக்குள் தள்ளி தம் அரசியலை முன்னெடுக்கவும் வேகம் காட்டும் காலகட்டம் இது. எமது மக்களையும் தேசத்தையும் தேசியத்தையும் காக்கவும் எதிர்கால பேரவலத்திலிருந்து மீட்கவும் அவசர செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை கொடுக்கின்றோம். – என்றுள்ளது.

# முல்லைத்தீவிலும், வவுனியா வடக்கிலும் விரைந்து நெற்கொள்வனவு ஆரம்பிக்குக!

## வவுனியா வடக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்து









**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சிய சாலைகளை நிறைத்துள்ளன. ஏற்கனவே கொள்வனவுசெய்யப்பட்ட நெல்லை அகற்றி விரைந்து நெற்கொள்வனவை ஆரம்பிப்பதுடன், வவுனியா வடக்கிலும் நெல் சந்தைப்படுத்தல் சபை விரைந்து நெற்கொள்வனவை ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கூட்டுறவுப் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

களஞ்சியசாலைகளில் நிறைந்துள்ள நெல்லை உரியவகையில் அகற்றி விரைவாக விவசாயிகளிடமிருந்து நெல்சந்தைப்படுத்தல் சபையால் நெற்கொள்வனவவை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனாபிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க இதன்போது பதிலளித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

வவுனியா வடக்கில் நெற்கொள்வனவு மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகள் எம்மிடம் முறையிட்டுள்ளனர். இதேநிலையே முல்லைத்தீவிலும் காணப்படுகின்றது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் முறிப்புப் பகுதியில் மாத்திரமே நெல்சந்தைப்படுத்தல் சபையினால் நெற்கொள்வனவு மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த வருடம் சிறுபோக காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் மூடைகள், நெல் சந்தைப்படுத்தல் சபைக்குரிய ஏனைய களஞ்சிய சாலைகளிலிருந்து அகற்றப்படாமல் நிறைந்து காணப்படுகின்றன எனச் சொல்லப்படுகின்றது. எனவேதான் நெற்கொள்வனவு இடம்பெறவில்லை என்றும் கூறப்படுகின்றது.

நெல் சந்தைப்படுத்தல் சபையால் முல்லைத்தீவு முறிப்பு பகுதியில் மேற்கொள்ளப்படும் நெற்கொள்வனவுச் செயற்பாட்டைநேரடியாகச்சென்றுபார்வையிட்டமையுடன், நெல் சந்தைப்படுத்தல் சபையின் உதவிப் பிராந்திய முகாமையாளரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தேன். நெற்கொள்வனவை மேற்கொள்வதற்கு களஞ்சியசாலைகள் இல்லாத நிலை காணப்படுவதாக அவரும் என்னிடம் முறையிட்டுள்ளார்.

அதேவேளை முறிப்பில் நெற்கொள்வனவு இடம்பெறுவதைப்போல ஏனைய இடங்களிலும் நெற்கொள்வனவுச் செயற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டுமென விவசாயிகளாலும் என்னிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் ஈரப்பதனான நெல் கொள்வனவு செய்யப்படுவதில்லை என்பதால் பலத்த இடர்பாடுகளுக்கு மத்தியில் மோசமான காலநிலை மாற்றம் மற்றும் காட்டு யானைகளின் அட்டகாசம் என்பவற்றை எதிர்கொண்டு வீதிகளில் நெல்லை உலரவைத்து நெல்சந்தைப்படுத்தல் சபையின் நெற்கொள்வனவு எப்போது இடம்பெறுமென எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

அத்தோடு இவ்வாறு நெல்சந்தைப்படுத்தல் சபை உரியகாலத்தில் நெற்கொள்வனவை ஆரம்பிக்காததால் தனியார் நெற்கொள்வனவாளர்களிடம் விவசாயிகள் குறைந்தவிலையில் நெல்லை விற்பனை செய்து நட்டமடைகின்ற அவல நிலைகளும் ஏற்பட்டுள்ளன.

எனவே ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு முல்லைத்தீவு களஞ்சிய சாலைகளில் நிறைத்துவைத்துள்ள நெல்லை அகற்றி உடனடியாக அனைத்து இடங்களிலும் நெற்கொள்வனவை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதேபோல வவுனியா வடக்கிலும் உடனடியாக நெற்கொள்வனவை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். - எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் வவுனியாவடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், பிரதியமைச்சருமான உபாலி சமரசிங்க இதன்போது பதிலளிக்கையில் -

விவசாயிகளிடமிருந்து உரியகாலத்தில் நெற்கொள்வனவை மேற்கொள்வதற்கென கூட்டங்கள் நடாத்தப்பட்டு நெல்லுக்கான விலை நிர்ணயமும் செய்யப்பட்டது.

அத்தோடு ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலைகளில் உள்ள நெல்லை சதோச மற்றும் கூட்டுறவுச்சங்கங்களுக்கு வழங்கும்படி ஜனாதிபதியாலும் உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும் ஏற்கனவே கொள்வனவு செய்த நெல்லை களஞ்சிய சாலைகளிலிருந்து உரியவகையில் அகற்றமுடியாதநிலை ஏற்பட்டது.

இதனாலேயே வடபகுதியில் கூடுதலான இடங்களில் நெல்அறுவடை நிறைவடைந்துள்ள போதும் அனைத்து இடங்களிலும் முறையாக நெற்கொள்வனவை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே விரைவில் களஞ்சியசாலைகளிலுள்ள நெல் உரியவகையில் முற்றாக அகற்றப்பட்டு விவசாயிகளிடமிருந்து உரிய வகையில் நெற்கொள்வனவை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். - எனத் தெரிவிததார்.











# ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்று திருகோணமலையில் அங்குரார்ப்பணம்

ஈழத்தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கான வெளியகப் பொறிமுறைகளை உருவாக்குவதற்கான மூலமான செயற்பாட்டு தளமாக ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்று திருகோணமலையில் நேற்று சனிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலையில் உள்ள தனியார் விடுதியில் நேற்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது. தென்கயிலை ஆதீன குரு முதல்வர், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இமானுவேல் மற்றும் சிவகுரு ஆதீன குருமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை இடம்பெற்று ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்றிற்கான உத்தியோகபூர்வ இணையத்தளம் தொடங்கி வைக்கப்பட்டது.

தொடர்ந்து இந்த அமைப்பின் உருவாக்கத்திற்கான காரணம், நோக்கம், இலக்கு என்பன எடுத்துரைக்கப்பட்டது.

அத்துடன், திருகோணமலைப் பிரகடனம் 2026 வெளியிட்டு வைக்கப்பட்டது. எட்ரா அமைப்பின் இணையத் தளத்தில் இப்பிரகடனம் தரவேற்றப்பட்டுள்ள நிலையில் மார்ச் 15ஆம் திகதிவரை அதில் சேர்க்கைகளுக்கான முன்வைப்புகளை உலகளாவிய தமிழர்கள் வெளிப்படுத்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. உலகளாவிய தமிழர்களின் கருத்துகள், முன்வைப்புகள் பெறப்பட்டு இறுதி செய்யப்பட்டு தமிழர் தரப்பு நிலைப்பாடாக முன்வைக்கப்பட்ட உள்ளது.

வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் சங்கத்தினர், கிழக்கு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர், புத்திஜீவிகள், தமிழ்த் தேசிய ஆர்வலர்கள், ஆன்மீக தலைவர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர்.














# பயங்கரவாத தடைச்சட்ட முன்மொழிவுக்கு எதிரான கையெழுத்து போராட்டம் திருமலையில் ஆரம்பம்

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் புதிய பயங்கரவாத தடைச்சட்ட முன்மொழிவு ஆகியவற்றை முற்றாக நிராகரித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கையெழுத்துப் போரட்டம் திருகோணமலையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்று (EDRA) அங்குராற்பணநிகழ்வில் இக்கையெழுத்துப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இமானுவேல், சிவகுரு ஆதீன குரு முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், மட்டக்களப்பு அமெரிக்கன் மிசன் அருட்பணி லூக் ஜோன் ஆகியோர் முதல் கையொப்பங்களை பதிவு செய்தனர். பின்னர் நிகழ்வில் பங்கேற்றவர்களும் கையொப்பம் இட்டு வலுச்சேர்த்திருந்தனர்.

“உங்கள் கையெழுத்து உங்கள் உரிமையைக் காக்கும் என்ற தொனிப் பொருளில், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட முன்மொழிவை கைவிடக் கோரியும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக் கோரியும் ஒரு லட்சம் கையெழுத்து பெறும் இலக்குடன் வடக்கு. கிழக்கு தழுவிய மாபெரும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சார்பில், வடக்கு கிழக்கு குடிசார் அமைப்புகளின் கூட்டிணைவில் முன்னெடுக்கப்படும் மாபெரும் கையெழுத்துப் போராட்டமானது எதிர்வரும் 25ஆம் திகதி வரை முன்னெடுப்பட்டு நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் அதன் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர், ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட அனைத்துலக இராஜதந்திரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 10 சதவீதமான சிறுநீரக நோயாளர்கள் நோய் இருப்பதை அறியாமல் உள்ளனர்

இலங்கையில் 10 சதவீதமான சிறுநீரக நோயாளர்கள் தங்களுக்கு நோய் இருப்பதை அறியாத நிலையில் உள்ளனர் என சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.


தேசிய சிறுநீரகவியல், ரத்த சுத்திகரிப்பு மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நிறுவனத்தின் விசேட நிபுணர் வைத்தியர் அர்ஜுன மாரசிங்க இதனை குறிப்பிட்டுள்ளார்.

உயர் இரத்த அழுத்தம் அல்லது நீரிழிவு நோயைச் சரியாகக் கையாளத் தவறுபவர்களுக்கு சிறுநீரக நோய் ஏற்படும் அபாயம் மிக அதிகமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல நோயாளர்கள் நோய் முற்றிய நிலையை எட்டும் வரை தங்களுக்குப் பாதிப்பு இருப்பதை உணர்வதில்லை எனச் சுட்டிக்காட்டிய அவர், உயர் இரத்த கொழுப்பு அல்லது அதிக இரத்த சர்க்கரை அளவு கொண்டவர்கள் முறையாக சிறுநீரகப் பரிசோதனைகளைச் செய்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.



நோயை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிவது தீவிரமான சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு மிகவும் அவசியமானது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# அபாய நிலை பாடசாலைகள் தொடர்பில் மாவட்ட கல்வி அலுவலகங்களுக்கு தகவல்

சாதாரணதரப்பரீட்சைகாலத்தில்மழை பெய்யலாம் என்பதால், அபாய நிலையிலுள்ள பாடசாலைகள் குறித்த தகவல்கள் அந்தந்த மாவட்ட கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மோசமான வானிலை காலத்தில் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய, பாடசாலைகள் செயல்பட வேண்டும் என்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்.

அதன்படி, பாடசாலைகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்கள் குறித்து வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இந்த நிலையில், இன்று முதல் தென்கிழக்கு வங்காள விரிகுடா கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதனால், எதிர்கால முன்னறிவிப்புகள் மற்றும் இது தொடர்பாக வெளியிடப்படும் அறிவிப்புகள் குறித்து பொதுமக்கள் கவனம் செலுத்துமாறு திணைக்களம் கோரியுள்ளது.

# டெங்கு குடம்பிகளின் சதவீதம் பாடசாலைகளில் அதிகரிப்பு

பாடசாலைகளில் டெங்கு குடம்பிகளின் சதவீதம் அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பதில் பணிப்பாளர் கபில கன்னங்கர, ஆய்வு செய்யப்பட்ட பாடசாலைகளில் 40 சதவீதத்தில் தற்போது டெங்கு குடம்பிகள் பதிவாகியுள்ளன என்று தெரிவித்தார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களில் புகை விசுறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டார்.



## மின்சாரக் கட்டண திருத்தம்:

# பொதுமக்களின் கருத்துக்களை கோருகின்றது இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

இலங்கை மின்சார சபை அதன் செலவுகளை ஈடுகட்டுவதற்காக மின்சாரக் கட்டண திருத்தத்தை முன்மொழிந்துள்ளது.

மின்சார சபையின் உற்பத்தி மற்றும் விநியோகச் செலவுகளைச் சரிகட்டுவதற்காக இந்த கட்டண திருத்தம் முன்மொழியப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பொதுமக்களின் கருத்துக்களைக் கோரியுள்ளது.

PUCSL



# இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 4 லட்சத்தைக் கடந்தது

2026 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 4 லட்சத்தை கடந்துள்ளதாக, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 4 லட்சத்த ஆயிரத்து 787 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இந்த காலப்பகுதியில், ஒரே நாளில் அதிகபட்ச சுற்றுலாப் பயணிகள் பெப்ரவரி 12 ஆம் திகதி வருகை தந்துள்ளனர்.

அதன்படி. இந்த நாளில் 12 ஆயிரத்து 731 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து மாத்திரம் 70 ஆயிரத்து 880 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, பெப்ரவரி மாதத்தின் முதல் 12 நாள்களில் மாத்திரம் ஒரு லட்சத்து 24 ஆயிரத்து 460 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மறுசீரமைப்பு:

# தனியார் நிறுவனங்கள் இலாபமடைவதற்கு வழிவகை செய்யப்படுவதாக குற்றச்சாட்டு

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைப்பதாகக்கூறி, மக்களின் வரிப் பணத்தைப் பயன்படுத்தி சில தனியார் நிறுவனங்கள் இலாபமடைய வழிவகை செய்யப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் பெறுமதியான பிரிவுகளைத் தனியார் நிறுவனங்கள் இலாபமீட்டும் வகையில் கைமாற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் 2.5 பில்லியன் ரூபா மதிப்புள்ள பங்குகளை குறைந்த விலையில் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம் திரட்டப்படும் பணத்தைக் கொண்டு விமான நிறுவனத்தின் கடன் சுமையைக் குறைப்பதே அரசாங்கத்தின் திட்டம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.



# இன்னொரு விக்னேஸ்வரன் ஆகின்றாரா சிறீதரன்?





புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய அரசியலின் சாபக்கேடுகளில் பிரதானமானது, தனி நபர்களைச் சுற்றி அரசியலைக் கட்டமைப்பது. அதன் நீட்சிதான், 'தியாகி – துரோகி' அடையாள அரசியலாக நிலைபெற்றுவிட்டது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் நிறுவனத் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆரம்பித்து வைத்த இந்த அரசியல் செல்நெறியை அவரின் பேரன் காலத்து அரசியல் களமும் தூக்கிச் சுமக்கின்றது. அருணாச்சலம் மகாதேவாவை தமிழினத் துரோகியாகச் சித்திரித்துக் கொண்டு தமிழ் மக்களிடம் நம்பிக்கை நாயகனாக எழுச்சிபெற்ற ஜீ.ஜீ.பொன்னம்பலம், சில காலத்துக்குள்ளேயே தந்தை செல்வா உள்ளிட்ட அவரின் முன்னாள் சகபாடிகளினால் துரோகியாக அறிவிக்கப்பட்டார்.

தமிழரசுக் கட்சியின் வருகையோடு தமிழ்த் தேசிய அரசியல் வீச்சம் பெற்றது. அப்போதும், தமிழ் அரசியல் பரப்பு தனிநபர்களை முன்னிறுத்திய அரசியலுக்குள்ளேயே நிலைத்தது. ஜீ.ஜீ.பொன்னம்பலம், தந்தை செல்வா, அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், (தலைவர் பிரபாகரன் – ஆயுதப் போராட்ட காலம்), இரா.சம்பந்தன் என்றுதான் தமிழ் அரசியல் நீண்டது. அதன் அடுத்த கட்டத்திற்கான நபருக்கான ஓட்டம் கடந்த பதினைந்து ஆண்டுகளாக நிகழ்கின்றது. ஆனால், இந்த இடத்தில் எம்.ஏ.சுமந்திரனைக் கொண்டு வந்து முன்னிறுத்திய பொறுப்பினை சம்பந்தன் எவ்வளவுக்கு எவ்வளவு கொண்டிருக்கிறாரோ, அதேயளவுக்கான பொறுப்பினை கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கொண்டிருக்கிறார். தமிழ்த் தேசிய அரசியலுக்கு சுமந்திரனை அழைத்து வந்தவர் என்ற ரீதியில சம்பந்தன் அதற்கான பொறுப்பை, அதில் பெருமை – சிறுமை எது இருந்தாலும் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், கஜேந்திரகுமாருக்கு ஏன், சுமந்திரன் சார்ந்து பொறுப்பு ஏற்படுகின்றது என்ற கேள்வி இயல்பானது. ஏனெனில், அவர்தான், தன்னுடைய பாட்டனார் அறிமுகப்படுத்திய "தியாகி – துரோகி" அரசியல் அரிச்சுவடியை "சம்பந்தன்– சுமந்திரன்" தலைமைக்கு எதிராக மூர்க்கமாக முன்னெடுத்தார். அவர், சம்பந்தன் காலத்துக்குப் பிறகு, (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு –) தமிழரசுக் கட்சியின் தலைமையை சுமந்திரனே பொறுப்பெடுப்பார் என்ற ரீதியில் களத்தினை தயார்ப்படுத்திக் கொடுத்தார். தலைமைப்பதவி அல்லது ஆட்டுவிக்கும் நிர்வாகியாக களத்தில் நிலைபெற வேண்டும் என்று சுமந்திரன் நினைப்பதற்கு முன்னாலேயே, அவரைச் சுற்றியே ஊடக – இராஜதந்திர – சமூக – அரசியல் வெளியை உருவாக்கி வைத்தவர்கள், கஜேந்திரகுமாரும் அவரது பரிவாரமும். இந்த விடயத்தை 2014களிலேயே, இந்தப் பத்தியாளர் சுட்டிக்காட்டியிருக்கிறார். சம்பந்தன் காலத்துக்குப் பின்னராகவேனும் தமிழ்த் தேசிய அரசியல் "கூட்டுத்தலைமை – கூட்டுப்பொறுப்பு" என்ற நிலைக்குச் செல்ல வேண்டும். அதனை நோக்கி அரசியல் செல்நெறி இருக்க வேண்டும் என்று இந்தப் பத்தியாளர் எழுதி வந்திருக்கிறார். ஆனால், அதன் தாற்ப்பரியங்களை உள்வாங்காது, தியாகி – துரோகி அரசியலுக்குள் மீண்டும் மீண்டும் தமிழ்த் தேசிய அரசியலை தள்ளி, இன்றைக்கு ஜே.வி.பி காரர்கள் வந்து தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வகுப்பெடுக்கும் நிலைக்குள் அரசியலை கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்.


இன்றைக்கு தமிழரசுக் கட்சி கிட்டத்தட்ட சுமந்திரனின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. அவருக்கு சவால் விடுக்கக் கூடிய தரப்பினர் என்று நம்பப்பட்ட அனைவரும் கட்சிக்குள் வலுவிழந்துவிட்டார்கள். அல்லது, வெளிச் சென்று செல்லாக் காசாகிவிட்டார்கள். இப்போது சுமந்திரன் செய்து கொண்டிருக்கும் அரசியல் என்பது கடந்த பொதுத் தேர்தலில் கட்சி கண்ட தோல்வியிலிருந்து மீள்வது. அதற்கு வாக்கு அரசியலின் போக்கில் எவ்வளவு நெகிழ்வுப் போக்கோடும் விடயங்களை அணுக முடியும் என்று நினைப்பதில் இருந்து நிகழ்கிறது. அதற்காகத்தான், கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் முட்டிக்கொண்டிருந்தவர்களோடு எல்லாமும் இணக்கமான அணுகுமுறையைப் பேணுகிறார். வாக்கு – அதிகார அரசியலில் நிரந்தர நண்பனும் எதிரியும் இல்லை என்பது யதார்த்தமான வாதம். ஆனால், தன்முனைப்புள்ள (ஈகோ) சுமந்திரன் போன்றவர்களே, அந்த அணுகுமுறைக்குள் வருவதற்கு தோல்விகள் படிப்பினையாக அமைகின்றன. கடந்த பொதுத் தேர்தலில் அவரும், கட்சியும் கண்ட பின்னடைவு அவரை, தன்முனைப்பு மனநிலையின் சில கட்டங்களில் இருந்து இறங்கி வர வைத்திருக்கின்றது. அதுதான், அவரை இன்றைக்கு கூட்டமைப்பின் முன்னாள் பங்காளிக் கட்சிகள் அனைத்துடனும் நெருக்கமான உறவைப் பேண வைத்திருக்கின்றது. அதற்கு, சுமந்திரனும் – சுரேஷ் பிரேமச்சந்திரனும் அண்மைய காலத்தில் காட்டும் இணக்கமான போக்கை உதாரணமாகக கொள்ளலாம். சுமந்திரனின் அரசியல் வருகையோடு, கூட்டமைப்புக்குள்ளும் தமிழ்த் தேசிய அரசியலுக்குள்ளும் முதன்முதலில் கீழிறக்கப்பட்டவர் என்றால், அது சுரேஷ்தான். கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியை சுமந்திரனிடம் இழந்தார். 2015 பொதுத் தேர்தலிலும் தோற்றுப் போனார். அன்றிலிருந்து சுரே/க்கு சுமந்திரன் என்றால் வேப்பங்காய் கசப்பு. ஆனால், அண்மைய மாதங்களில் சுமந்திரனின் குரலாக சுரேஷ் ஒலித்துக் கொண்டிருக்கிறார். அவர் நடத்தும் ஊடக சந்திப்புக்கள் பலவும், சுமந்திரன் நடத்த வேண்டிய ஊடக சந்திப்புக்கள் என்று எண்ணும் அளவுக்கு இருக்கின்றன. இந்த இணக்கம், தோல்விகள் கொடுத்த படிப்பினைகளினால், இருவருக்கும் வந்திருக்கின்றது. ஏனெனில், தங்களுக்குள் அடிபட்டு பொது எதிரியான தென் இலங்கைச் சக்திகளை உள்ளுக்குள் அனுமதித்த அவஸ்தை அதனைக் கொடுத்தது.

யார் விரும்பினாலும் இல்லையென்றாலும் சுமந்திரன் விரும்பினால் அன்றி, தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து அவரின் வகிபாகத்தை அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் யாரினாலும் ஆட்டங்காணச் செய்ய முடியாது. அந்தக் கட்டத்திற்கு கட்சிக்குள் தீர்மானிக்கும் சக்தியாகவும் முக்கியஸ்தராகவும் அவர் நிலைபெற்றுவிட்டார். இப்போதும் அவரைச் சுற்றித்தான் தமிழ்த் தேசிய அரசியலில் தீர்மானங்கள் எழுகின்றன. அல்லது வீழ்கின்றன. ஆனால், தியாகி – துரோகி கோஷமும் சற்றுச் சுரமிழந்திருக்கின்றன என்பதுவும் உண்மைதான். ஏனெனில், கடந்த காலங்களில் யார் யாரையெல்லாம் நோக்கி, துரோக அடையாள அரசியல் செய்யப்பட்டதோ, அவர்களையெல்லாம் கூட்டிணைத்துக் கொண்டு பயணிக்கும் நிலைக்கு கஜேந்திரகுமாரே நகர்ந்திருந்தார். அவருக்கு என்றைக்குமே ஏற்றுக்கொள்ள முடியாத ஒருவராக சுமந்திரனின் அரசியலே இருக்கின்றது. அது, தனது அரசியல் நிலைபெறுகைக்கு தேவையான ஒன்று என அவர் நினைக்கிறார். அதாவது, மகாதேவாவுக்கு எதிராக பாட்டனார் கையாண்ட அரசியல் உத்தி.

இப்போதும், தமிழரசுக் கட்சிக்குள் சலசலப்புக்கள் உண்டு. சுமந்திரன் எதிர் சிறீதரன் என்கிற

தொடர்ச்சி ▼

# இன்னொரு விக்னேஸ்வரன் ஆகின்றாரா சிறீதரன்?





தொடர்ச்சி ▲

நிலையை பல தரப்பினரும் பேண நினைக்கின்றார்கள். ஆனால், அது ஒப்பீட்டளவில் அவ்வளவு பெரிய விடயமாக இல்லை. ஏனெனில், கட்சியைவிட்டு வெளிச் சென்றால், பத்தோடு பதினொன்றாகிவிடுவேன் என்கிற பயம் சிறீதரனுக்கு உண்டு. அதுபோல, சிறீதரனை கட்சியைவிட்டு அனுப்பினால், கிளிநொச்சிக்குள் கிடைக்கும் வாக்குகளில் ஒருபகுதியை இழக்க வேண்டி வரும் என்கிற எண்ணம் சுமந்திரனுக்கும் உண்டு. சிறீதரன் கட்சிக்குள் இருக்க வேண்டுமா, இல்லையா என்ற முடிவை எடுக்கும் அதிகாரத்தோடு சுமந்திரன் இருக்கிறார். இதுதான் யதார்த்தம். அரசியல் குழு, மத்திய குழு தொடங்கி தீர்மானங்களை எடுக்கும் அனைத்துக் கட்டங்களிலும் சுமந்திரனே ஆதிக்கம் செலுத்துகிறார். ஆனாலும், சுமந்திரன் தன்னுடைய அரசியல் குருநாதரான சம்பந்தனின் வழியில் நின்று விடயங்களைக் கையாள நினைக்கிறார். அதாவது, சம்பந்தனின் அனுசரணையோடு தான் எடுத்த அதிரடியான நடவடிக்கையொன்றினால், சி.வி.விக்னேஸ்வரன் என்கிற அரசியல் முதிர்ச்சியற்ற ஒருவரை திடீரென நாயக பிம்பம் சூழ்ந்தது. அதற்கு, வடக்கு மாகாண சபைக்குள் சுமந்திரன் அணி, முன்னெடுத்த முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்கிற அம்பு காரணமானது. ஆனால், விக்னேஸ்வரனைச் சுற்றி திடீரென எழுந்த ஆதரவு அலையைக் கண்டதும், சுமந்திரனைக் கொண்டு தான் எய்த்த அம்பின் நுனியை, சம்பந்தனே உடைத்தார். அத்தோடு, விக்னேஸ்வரனைச் சுற்றி மேலும் ஆதரவு அலை எழுந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார், கட்சிக்குள் இருந்து நீக்காமல் காலங்கடத்தி விக்னேஸ்வரனை, தனிநபர் கட்சியொன்றின் தலைவராக மாத்திரம் மாற்றினார். அவரைச் சுற்றி ஜனவசிய வட்டங்களை வரைந்தவர்களே, விக்னேஸ்வரனை தூற்றும் காலம் ஏற்பட்டது. அவர், பின்னரான காலத்தில், சாராய அனுமதிப்பத்திரம் வாங்கிக் கொடுக்கும் முகவராக செயற்பட்டமையையெல்லாம் காலம் காட்டியது. இன்றைக்கு விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய அரசியலில் ஒன்றுமேயில்லை. இது, சம்பந்தனின் அணுகுமுறையினால், நிகழ்த்தப்பட்டது. தன்னுடைய அரசியல் குருவின் பாதையில் பயணிக்கும் கட்டத்திற்கு சுமந்திரன் இன்றைக்கு வந்திருக்கிறார். அதற்கு அவரின் வயதும், கடந்த கால அனுபவங்களும் காரணமாக இருக்கலாம்.

சிறீதரன், ஒருபோதும் தமிழரசுக் கட்சியைவிட்டுச் செல்ல மாட்டார். அது எப்படியென்றால், எதிர்கால தேர்தல்களில், யாழ் தேர்தல் மாவட்டத்தில் வீட்டுச் சின்னத்தின் கீழ் சிறீதரனும், சமத்துவக் கட்சியின் முருகேசு சந்திரகுமாரும் போட்டியிடும் சூழல் ஏற்பட்டாலும், அவர் வெளியேற மாட்டார். சிறீதரனைக் காட்டிலும் வீட்டுச் சின்னம் பெரியது என்ற யதார்த்தம் அவருக்குத் தெரியும். அதனால், அவர் தானாகக் கட்சியை விட்டு ஒருபோதும் செல்ல மாட்டார். அப்படி வெளியேறிய பலரும், தமிழ் அரசியலில் காணாமற்போன காட்சிகளையும் அவர் தெளிவாக உள்வாங்கியிருக்கிறார். அதனால், சிறீதரன் தமிழரசுக் கட்சியைவிட்டு வெளியேறிவிடுவார் என்று யாரும் நம்ப வேண்டியதில்லை. அதுபோல, அவரை தமிழரசுக் கட்சி, குறிப்பாக சுமந்திரன் கட்சியை விட்டு வெளியேற்றும் முடிவை எடுக்கவும் மாட்டார். "ஊறப்போட்டு அடிப்பது..." என்ற அணுகுமுறையை சுமந்திரன் இப்போது கையில் எடுத்திருக்கிறார். சிறீதரனின் அரசியல் என்பது இப்போது, சுமந்திரனுக்கு எதிரான நபராக தன்னை முன்னிறுத்திக் கொள்வதன் மூலம் அனுதாப அரசியலுக்கான வழியை தேர்தெடுப்பதாகும். அதற்கான உள்கட்ட வேலைகளைச் செய்வதில் சிறீதரன் அளவுக்கு யாரும் இல்லை என்பதுவும் உண்மை. ஆனால், அவரின் பிரச்சினை என்னவென்றால், அவரைச் சுற்றியுள்ள கொடுங்கரங்களின் அழுத்தமாகும். அரசமைப்புப் பேரவைக்குள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக எட்டுத் தடவைகள் வாக்களித்திருக்கிறார். அதுவும், இராணுவ அதிகாரிகளுக்காகவும் வாக்களித்திருக்கிறார் என்றால், அவரின் மீது ஏதோவொரு நிர்ப்பந்தம் இருப்பதை உணர முடிகின்றது.

தமிழ்த் தேசிய அரசியலின் பெயரினால் நாடாளுமன்றம் சென்ற சிறீதரன், இராணுவ மயமாக்கலுக்கு ஆதரவாக ஆளுங்கட்சியின், அதாவது தென் இலங்கை எதேச்சதிகார சக்திகளின் வேலைத்திட்டங்களுக்கு இணங்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்த அபாய வெளிக்குள் அவர் சிக்கிக் கொண்டமையால், இன்றைக்கு அவர் நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவியை இழந்திருக்கிறார். அவருக்கு நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியைக் காட்டிலும், அரசமைப்புப் பேரவை உறுப்பினர் பதவி முக்கியமாக இருக்கின்றது என்றால், அது தொடர்பில் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. சிறீதரன் வாக்கு அரசியலில் பெரும் கில்லாடி. ஆனால், அவர் இப்போது சிக்கிக் கொண்டிருக்கும் சகதி, அவரை மீள விடாது. நாளும் பொழுதும் அவர் ஊறப்போட்டு அடிக்கப்படுவார். அந்த வாய்ப்புக்களுக்காக காத்திருப்பவர்கள் ஏராளம் உண்டு. இன்றைக்கு அவரைப் பிணையெடுக்கப் பெரிதாக யாரும் இல்லை. சுமந்திரனைச் சுற்றித் தமிழ்த் தேசிய அரசியலை கட்டமைத்தவர்களில், ஒருசிலர் மாத்திரமே சிறீதரனுக்கு ஆதரவாக நிற்கிறார்கள். அதுவும், இராணுவத்துக்கு ஆதரவாக வாக்களித்த விடயங்களை அவர்களும் பொது வெளியில் எதிர்க்கிறார்கள். சில அரசியல் பத்தியாளர்கள் சிறீதரனுக்காக நிற்கிறார்கள். அவர்கள், கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் "பொது வேட்பாளர்" என்கிற காவடியை எடுத்துச் சுமந்த சிலர். அவர்களும் அப்போது, சிறீதரன், பொது வேட்பாளர் ஆதரவு நிலைப்பாட்டுக்காக நின்றார் என்ற ஒற்றைக் காரணத்துக்காகத்தான்.

கிளிநொச்சியில் நேற்று நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து சிறீதரன் நீக்கப்பட்டமைக்கு எதிராக கூட்டமொன்று கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் யார், அதன் ஒருங்கிணைப்பு எப்படி மேற்கொள்ளப்பட்டது என்பது, அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்தக் கூட்டத்தினால், எந்தச் சலசலப்பும் ஏற்படாது. ஏனெனில், அந்தக் கூட்டத்தின், ஏற்பாடுகளை மேற்கொண்டவர்களே கூட்டத்தில் பங்கெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அவ்வளவு தூரம் தமிழரசுக் கட்சி கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டிருக்கின்றது. இப்போது மாவை சேனாதிராஜா காலத்து தமிழரசுக் கட்சி இல்லை. தீர்மானங்களை தேவை ஏற்படும் பட்சத்தில் தெளிவாக – துரிதமாக – எடுக்கிறார்கள். கடந்த காலங்களில் கட்சியின் நிலைப்பாடுகளுக்கு எதிராக நின்றவர்கள், மன்னிப்புக் கடிதங்கள் என்கிற முள்முனையில் நிற்கிறார்கள். அப்படியான நிலையில், தமிழரசுக் கட்சிக்குள் சிறீதரனை முன்வைத்து எழுந்திருப்பது சின்னஞ் சிறு சலசலப்பு. அதனால், எந்த மாற்றங்களும் நிகழ்ந்துவிடாது. அந்த எதிர்பார்ப்பு, யாருக்கும் இருக்க வேண்டியதில்லை.

# வெடுக்குநாறி ஆலய சிவராத்திரி வழிபாடுகளுக்கு இன்று சைவப் பெருமக்கள் அணிதிரள வேண்டும்!

## ரவிகரன் எம்.பி. அழைப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

வவுனியா வடக்கில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக வழிபாட்டுத் தலமான ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்றைய தினம் இடம்பெறவுள்ள சிவராத்திரி தின விசேட வழிபாடுகளில் கலந்துகொள்வதற்காக சைவப்பெருமக்கள் அனைவரும் அணிதிரண்டு வருகை தரவேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடம் என்ற உரிமையைத் தொடர்ந்தும் நிலைநாட்டிட அனைத்துச் சைவப் பெருமக்களும் அணிதிரண்டு கலந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் குறித்த அழைப்புச் செய்தியினூடாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த காலங்களில் ஆட்சியாளர்களாலும், அரச இயந்திரங்களாலும் வெடுக்குநாறி மலையில் இடம்பெற்ற சிவராத்திரி வழிபாடுகளின்போது சைவப்பெருமக்களின்



வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், இம்முறை சைவப்பெருமக்களின் வழிபாடுகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படாதென கடந்த வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகளால் உறுதியளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே அனைத்துச் சைவப் பெருமக்களும் எமது உரிமையை நிலைநாட்டிட வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு அணிதிரண்டு வந்து சிவராத்திரி வழிபாடுகளில் பங்கேற்கவேண்டுமென அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# 40 வீதத்திற்கு மேற்பட்ட பிறப்புக்கள் யாழில் சத்திர சிகிச்சை மூலமேதான்!

(ந.லோகதயாளன்)

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் மகப்பேற்றில் 40 வீதத்திற்கு மேற்பட்ட பிறப்புக்கள் சத்திர சிகிச்சை மூலமே இடம்பெறுகின்றன என யாழ் போதனா வைத்தியசாலை அறிக்கையிட்டுள்ளது.

மாவட்டச் செயலகத்தின் புள்ளி விவரத்திற்கு போதனா வைத்தியசாலை வழங்கிய தகவலொலேயே இந்த விகிதம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற 10 ஆண்டு பிறப்பு விவரத்தில் இந்த எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 10 ஆண்டுகளில் வருடாந்தம் 5 ஆயிரத்தைத் தாண்டிய எண்ணிக்கையான மகப்பேறுகள் இடம்பெறுகின்றபோதும் அது 6 ஆயிரத்தைத் தொடவில்லை.

இந்த எண்ணிக்கையின் பிரகாரம் 2021ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 512 சுகப் பிரசவங்களும் 2 ஆயிரத்து 99 பிரசவங்கள் சத்திர சிகிச்சை மூலமும் இடம்பெற்றுள்ளன. 2022 இல் 3 ஆயிரத்து 262 சுகப் பிரசவங்களும் 2 ஆயிரத்து 141 பிரசவங்கள் சத்திர சிகிச்சை மூலமும் இடம்பெற்றுள்ளன. 2023 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 77 சுகப் பிரசவங்களும் 2 ஆயிரத்து 141 பிரசவங்கள் சத்திர சிகிச்சை மூலமும் இடம்பெற்றுள்ளன.

தமிழர் தாயகத்தில் காலம் தாழ்த்திய திருமணமும் சத்திர சிகிச்சை அதிகரிப்பிற்கு ஓர் காரணமாகக் கூறப்படுவதோடு சத்திர சிகிச்சை மூலமான பிறப்பின் காரணமாக பிறப்பு வீத குறைவில் பெரும் தாக்கம் ஏற்படுகின்றது என சுகாதாரத் தரப்பால் நீண்ட காலமாக சுட்டிக் காட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கைதடியில் ஓதுவார்களுக்கு இன்று மதிப்பளிப்பு

இந்து கலாசாரத் திணைக்களம், தென்மராட்சி பிரதேச செயலகம், சிவபூமி நாவற்குழி திருவாசக அரண்மனை ஆகியவற்றுடன் கைதடி சைவ ஐக்கிய சங்கம் இணைந்து நடத்தும் சிவராத்திரி 2026 நிகழ்வு இன்று மாலை 6மணி முதல் இரவு முழுவதும் தொடர் கலை நிகழ்வுகள் நாவற்குழி திருவாசக அரண்மனை அரங்கத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஒரு பகுதியாக கைதடியில் நீண்ட காலம் சைவ சமய ஓதுவார்களாக செயல்பட்டு வருபவர்களை மதிப்பளிப்பு செய்யும் நிகழ்வு நடைபெற உள்ளது.

கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் தலைவர் தனபாலசிங்கம் துளசிராம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை அழைப்பாளராக தென்மராட்சி பிரதேச செயலர் திரு.எவ்.சி.சிவசோதியும், சிறப்பு அழைப்பாளர்களாக சாவகச்சேரி நகர சபை தவிசாளர் திரு.வ.சிறீபிரகாஸ், சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் பொ.குகதாசன், சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் இ.யோகேஸ்வரன், சாவகச்சேரி நகர சபையின் உபதவிசாளர் ஞா.கிசோர் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.






# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வளாகத்தில் நேற்று 'அன்னபூரணி' கலாசார மண்டபம் திறப்பு நிகழ்ச்சி

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட அன்னபூரணி கலாசார மண்டபம் நேற்று சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மண்டபத்தை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் அபிராமி கைலாச பிள்ளை கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இதன் போது திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் ராம கிருஷ்ணன், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், அப்பகுதி மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது அன்ன பூரணி மட நிர்வாக உறுப்பினர்களும்கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக் கது.


















# அசாம் நெடுஞ்சாலையில் அவசர கால ஓடுதளம்: இராணுவ விமானத்தில் தரையிறங்கினார் மோடி

அவசர காலத்தில் எளிதாக தரையிறங்கும் விதமாக அசாமில் உள்ள நெடுஞ்சாலையில் 100 கோடி இந்திய ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள பிரத்யேக ஓடுபாதையில், பிரதமர் மோடி நேற்று இராணுவ விமானத்தில் சென்று தரையிறங்கினார்.

அவசரகால பயன்பாட்டுக்காக ஓடுதளத்தை தொடங்கி வைத்து, .5,450 கோடி இந்திய ரூபா மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களையும் தொடங்கி வைத்தார்.

அவசர காலங்களில் விமானப்படை விமானங்களை உடனடியாக தரையிறக்கி, மீட்பு பணிகளை எளிதில் மேற்கொள்ளும் நோக்கில், அசாம் மாநிலம் திப்ரூகர் நகரின் மொரன் நெடுஞ்சாலையில் 4.2 கொலோ மீற்றர் தூரத்துக்கு அவசரகால விமான ஓடுதளம் (இ.எல்.எப்) 100 கோடி இந்திய ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஓடுதளம் மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைப்பதற்காக, பிரதமர் மோடி நேற்று அசாமுக்கு சென்றார் .

சாபுவா விமானப்படை தளத்துக்கு வந்த பிரதமரை அசாம் ஆளுநர் லட்சுமண் பிரசாத் ஆச்சார்யா, முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் ஆகியோர் வரவேற்றனர். பின்னர், அங்கிருந்து விமானப்படைக்கு சொந்தமான சி-130ஜே ரக போக்குவரத்து விமானத்தில் பிரதமர் மோடி பயணம் செய்தார். திப்ரூகரின் மொரன் நெடுஞ்சாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அவசரகால விமான ஓடுதளத்தில் அந்த விமானம் தரையிறங்கியது.

இதையடுத்து, அவசரகால பயன்பாட்டுக்காக ஓடுதளத்தை பிரதமர் தொடங்கி வைத்தார். பிறகு, 40 நிமிடங்கள் நடைபெற்ற போர் விமானங்களின் சாகச நிகழ்ச்சியையும் பார்வையிட்டார். சுகோய், ரஃபேல், தேஜஸ் உள்ளிட்ட போர் விமானங்கள் மொரன் நெடுஞ்சாலையில் தரையிறங்கி, புறப்பட்டுச் சென்றன.

சீனா தனது எல்லைப் பகுதியில் 7 விமானப்படை தளங்களை அமைத்துள்ளது. இதற்கு போட்டியாக இந்தியாவும் எல்லை அருகே ஹசிமரா, தேஜ்பூர், ஜோர்ஹாட், சாபுவா ஆகிய பகுதிகளில் விமானப்படை தளங்களை அமைத்துள்ளது. போர் சூழலில், பெரும்பாலும் விமானப்படைத் தளங்கள் குறி வைத்து தாக்கப்படும். இதை கருத்தில் கொண்டு, அசாமில் உள்ள நெடுஞ்சாலையில் அவசரகால விமான ஓடுதளம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிரதமர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில்,

“அவசரகால பயன்பாட்டுக்காக நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த விமான ஓடுதளம் மிக முக்கியமானது. மொரன் பைபாஸ் சாலையில் 4.2 கிலோ மீற்றர் தூரத்துக்கு 100 கோடி இந்திய ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஓடுதளம், விமானப்படை பயன்பாடு மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவும். திப்ரூகர் விமான நிலையத்தில் அவசரநிலை ஏற்பட்டாலும், இந்த ஓடுதளத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதில் 40 தொன் எடையுள்ள போர் விமானம், மற்றும் 74 தொன் எடையுள்ள போக்குவரத்து விமானங்கள் தரையிறங்கி, புறப்பட்டுச் செல்ல முடியும். நாட்டின் முதல் அவசரகால விமான ஓடுதளம் ராஜஸ்தான் மாநிலம் பார்மர் மாவட்டத்தில் கடந்த 2021ம் ஆண்டில் தொடங்கப்பட்டது.” என்று குறிப்பிட்டுள்ளார்.









# இலங்கையில் விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தாயகம் திரும்புவதற்கு நடவடிக்கை தேவை

## மத்திய அரசுக்கு முதல்வர் கடிதம்



இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்கள் தாயகம் திரும்ப உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில்,

“இலங்கை கடற்படையினரால் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் மற்றும் 28.12. 2025 அன்று மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

சிறை பிடிக்கப்பட்ட 12 தமிழக மீனவர்களில், 9 மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். மூன்று மீனவ படகு ஓட்டுநர்களுக்கு ஆறு மாத கடுங்காவல் தண்டனையும், இலங்கை ரூபா மதிப்பில் தலா 11.60 லட்சம் அபராதமும், அபராதத்தை செலுத்த தவறும் பட்சத்தில் கூடுதலாக மூன்று மாத சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 9 மீனவர்களும் கடந்த 05 ஆம் திகதி மிரிஹானா தடுப்பு மையத்திற்கு மாற்றப்பட்டனர் எனவும் தாயகம் திரும்புவதில் உள்ள நடைமுறை தாமதம் காரணமாக அவர்கள் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என கூறப்படுகிறது.

இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நம் நாட்டு மீனவர்கள் அங்கு சந்திக்கும் கடினமான சூழ்நிலையையும், மீனவர்களின் குடும்பங்கள் இங்கு எதிர்கொள்ளும் துயரங்களையும் கருத்தில் கொண்டு, விடுவிக்கப்பட்ட மீனவர்களை விரைவில் தாயகம் திரும்ப தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஈரான் கொமேனி அரசை அச்சுறுத்தும் வகையில் 2 ஆவது போர்க் கப்பலை அனுப்புகிறார் ட்ரம்ப்



ஈரானை அச்சுறுத்தும் வகையில் 2 ஆவது போர்க் கப்பலை அமெரிக்கா அனுப்பி வைக்கும் என்று ட்ரம்ப் நிர்வாகத்தை சேர்ந்த உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

ஈரானில் கொமேனி அரசுக்கு எதிராக மக்கள் உள்நாட்டு கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு கட்டுப்பாடுகளை எதிர்த்தும் சுதந்திரம் வேண்டியும் பொது மக்கள் ஈரான் முழுவதும் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மீது அரசு கடும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஈரான் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்தார்.

அதற்காக ஏற்கெனவே ஒரு போர்க் கப்பலை மத்திய கிழக்குப் பகுதிக்கு அனுப்பி வைத்தார். ஆனால், ஈரான் மீது தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவோம் என்று ஈரானும் எச்சரித்தது.

இந்நிலையில், மத்திய கிழக்குப் பகுதியில் ஏற்கெனவே உள்ள போர்க் கப்பலுக்கு உதவியாக ‘யு.எஸ்.எஸ். ஜெரால்டு ஆர் போர்டு’ என்ற 2 ஆவது போர்க் கப்பலை அமெரிக்கா அனுப்பி வைக்கும் என்று ட்ரம்ப் நிர்வாகத்தை சேர்ந்த உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் பணிகளில் ஈடுபடுவதாக ட்ரம்ப் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறார். அந்தப் பின்புலத்திலும் ஈரானில் உள்நாட்டு கலவரமும் சேர்ந்துள்ளதால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதை தணிக்க ஓமன் மற்றும் கட்டாரில் ஈரான் – அமெரிக்கா உட்பட முத்தரப்பு பேச்சுவார்த்தை கடந்த வாரம் நடத்தப்பட்டது. எனினும், அந்தப் பேச்சுவார்த்தையில் சுமுக முடிவு எட்டப்படவில்லை.

இதையடுத்து, ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் ஏற்கெனவே இஸ்ரேல் – ஹமாஸ் இடையே நடைபெற்றுவரும் சண்டை மத்திய கிழக்குப் பகுதி முழுவதும் பரவும் என்று வளைகுடா நாடுகள் எச்சரித்து வருகின்றன.

இந்நிலையில் அமெரிக்கா 2 ஆவது போர்க் கப்பலை மத்திய கிழக்குப் பகுதிக்கு அனுப்பினால் நிலைமை மோசமாகும் என்று அஞ்சப்படுகிறது.






# 53 ஆபிரிக்க நாடுகளின் இறக்குமதிக்கு பூஜ்ஜிய வரி

## சீனா அறிவிப்பு

சீனாவுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ள 53 ஆபிரிக்க நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருள்களுக்கும், எதிர்வரும் மே 1 ஆம் திகதி முதல் பூஜ்ஜிய வரி சலுகையை வழங்க சீனா தீர்மானித்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் கீழ், அந்த நாடுகளிலிருந்து சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் 100 சதவீத தயாரிப்புகளுக்கும் இறக்குமதி வரி முழுமையாக நீக்கப்படவுள்ளது.

எனினும், சீனாவுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டிராத "எஸ்வாட்டினி" நாட்டுக்கு மட்டும் இந்தச் சலுகை பொருந்தாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டமானது ஆபிரிக்க நாடுகளுக்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தகப் பரிமாற்றத்தை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெரிக்காவின் பொருளாதார தடையால் கியூபாவின் 'சிகர் திருவிழா' ஒத்திவைப்பு

அமெரிக்காவின் கடுமையான எரிபொருள் முடக்கல் மற்றும் பொருளாதாரத் தடைகள் காரணமாக, கியூபாவின் தலைநகர் ஹவானாவில் நடைபெறவிருந்த புகழ்பெற்ற "ஹபானோ சிகர் திருவிழா" காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாத இறுதியில் ஐந்து நாள்கள் நடைபெறவிருந்த இந்தச் சர்வதேசத் திருவிழா, கியூபா எதிர்கொண்டுள்ள "சிக்கலான பொருளாதாரச் சூழல்" காரணமாக நிறுத்தப்படுவதாக விழா ஏற்பாட்டுக் குழு நேற்று சனிக்கிழமை அறிவித்தது.

கியூபாவின் நீண்டகால நட்பு நாடான வெனிசுவேலாவிலிருந்து வரும் எண்ணெய் கப்பல்களை அமெரிக்கா தடுத்து நிறுத்தியதால், குறித்த நாடு முழுவதும் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது.

எரிபொருள் பற்றாக்குறையினால் ஒரு நாளைக்கு 18 மணிநேரம் வரை மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் மருத்துவமனைகள், நீர் இறைக்கும் நிலையங்கள் மற்றும் பொது போக்குவரத்து முடங்கியுள்ளன.

அத்துடன் விமான எரிபொருள் தட்டுப்பாட்டால் பல சர்வதேச விமான நிறுவனங்கள் கியூபாவிற்கான சேவைகளை நிறுத்தியுள்ளன.

கடந்த ஜனவரி 3ஆம் திகதி அமெரிக்க இராணுவம் வெனிசுவேலா முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவைக் கைது செய்ததைத் தொடர்ந்து, அங்கிருந்து நாளொன்றில் கியூபாவிற்கு வரும் சுமார் 35,000 பீப்பா எண்ணெய் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.



கியூபா தலைவர்கள் தம்முடன் பேச்சுவார்த்தைக்கு உடன்பட வேண்டும், இல்லையெனில் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை நிபுணர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

இது சர்வதேச சட்டங்களை மீறிய "ஒருதலைப்பட்சமான பொருளாதாரக் கட்டாயத்தின் உச்சக்கட்டம்" என்றும், ஒரு நாட்டின் இறையாண்மையை நசுக்கும் செயல் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை, வருடாந்தம் நடைபெறும் சிகர் திருவிழாவில் உலகத்தரம் வாய்ந்த கியூப சிகர் (சுருட்டு) தயாரிப்புத் தொழிற்சாலைகளைப் பார்வையிட ஒவ்வோர் ஆண்டும் சுமார் 70 நாடுகளிலிருந்து 1,300 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொள்வது வழக்கமாகும்.

தற்போது நிலவும் அசாதாரண சூழல் காரணமாக, சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இவ்விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.02.2025




உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்பட்டாலும் உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி மூலம் வெற்றி பெறுவீர்கள். பாதைகள் கடினம2ாக இருந் தாலும் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அமைதியாக இருங்கள். வெற்றி நிச்சயம்.

உங்கள் கடின உழைப்பு இன்று உங்களை வெற்றி பெற்ற மனிதனாக்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்புங்கள். இன்று வேலை அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் சிறப்பான திட்டத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்வீர்கள்.

உறவின் மதிப்பை உங்கள் துணை அறிந்து கொள்ளவும் இருவரும் அவரவர் பொறுப்பை உணர்ந்து கொள்ளவும் சில முக்கியமான விஷயத்தைப்பற்றி இன்று உங்கள் துணையுடன் பேச வேண்டியது அவசியம்.

சாதரணமாக செய்யும் செலவைக் காட்டிலும் இன்று செலவுகள் அதிகமாக இருக்கும்.




இன்று உங்களிடம் ஆன்மீக விழிப்பு ணர்வு காணப்படும். இதன் மூலம் அமைதி யும் உங்கள் எண்ணத்தில் தெளிவும் காணப்படும். உங்கள் வெற்றிக்கு இதுவே முதல் காரணமாக அமையும். இன்றைய நாளை சிறப்பாக்குங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முயலுங்கள்.

அன்றாடப் பணிகளைக் கூட இன்று கவனமுடன் கையாள வேண்டும். பணிகள் சிறிது அதிகமாக இருக்கும் என்பதால் நீங்கள் சிறிது பதட்டத்துடன் காணப்படு வீர்கள். பதட்டப்படாமல் அமைதியாக இருக்க வேண்டி யது அவசியம்.

உங்கள் மனதில் உள்ள தேவையற்ற தடைகளை நீக்கி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். எதைப் பற்றியாவது தெரியப்படுத்த வேண்டியிருந்தால் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.




இறை வழிபாடும் ஆன்மீக ஈடுபாடும் இன்று உங்களுக்கு வரமாக அமையும். சுய முன்னேற்றத்திற்கான பாதையில் செல்லுங்கள். உங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். நீங்கள் விரும்பியதைஅடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இன்று மிகவும் முன்னேற்றகரமான நாள். இன்று புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு காணப்படும். குடும்ப விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் மறக்க முடியாத நாளாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை வளர்ச்சிகரமாக இருக்கும். இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும். உங்களுக்கு நீண்ட கால பயன் தரும் விஷயத்திற்கு இன்று பணம் செலவு செய்வீர்கள்.




இன்று மிகவும் உற்சாகமான மகிழ்ச்சி யான நாள். இன்று உங்கள் மனதில் திருப்தி நிறைந்திருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். புதிய வாய்ப்புகள் மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் மகிழ்ச்சி காரண மாக நீங்கள் பல மடங்கு திறனுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவீர்கள். அவருக்கு பிடித்தமானதை செய்து இருவரும் ஒன்றாக நேரம் செலவு செய்வீர்கள். இதன் மூலம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அன்பைப் பெருக்க உதவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று பணம் அதிகமாக சம்பாதிப்பீர்கள். உங்கள் சம்பாத்திய மும் சேமிப்பும் இன்று ஏறுமுகமாக இருக்கும்.

மகிழ்ச்சி என்பது நம்முள் பிறப்பது என்பதை நினை வில் கொள்ளுங்கள்.




உங்களைச் சுற்றியுள்ளவர்களோடு ஒத்துச் செல்லுங்கள். இன்று ஏழை மற்றும் தேவைப்படுவோருக்கு உணவு அல்லது பணம் அளியுங்கள். இன்றைய நாளை கழிக்க ஏதாவது ஒரு பொழுது போக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

பணியிடத்தில் உங்கள் பொறுமை சோதனைக்குள்ளா கும். அமைதியாக பணிகளை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே எந்தவிதமான அகந்தைப் பிரச்சினையும் வரவிடாதீர்கள். உங்கள் துணையை புரிந்து கொள்ள முயலுங்கள். அவருக்கு ஆதரவு அளியுங்கள். இதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிக்க வேண்டியது முதன்மை யானது. கவலையற்ற எதிர்காலத்திற்கு பணத்தை




நீங்கள் இன்று உணர்ச்சிப்பூர்வ மான அணுகுமுறை மேற்கொள்வீர் கள். விரைந்து முடிவெடுக்காதீர்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு நடந்து கொள் ளுங்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வதன் மூலம் விஷயங்களை எளிதாகக் கையாளலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். அதனை மனதில் கொண்டு வருத்திக்கொள்ளாதீர்கள். விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவதைப் பற்றி சிந்திக்க முயலுங்கள்.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் அனுசரிப் பும் இருப்பது சிறப்பானது. அவரைப் பற்றிய கணிப்பை குறைத்துக் கொள்வதன் மூலம் உறவை மலரச் செய்யலாம்.

பண விஷயத்தில் பொறுமை தேவை சரியான நேரத்தில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.




இன்றைய நாள் சிறப்பான நாள். நீங்கள் உங்கள் செயல்களை குறித்த நேரத்துக்குள்ளோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். உங்கள் புத்தி சாலித்தனத்தை மேம்படுத்த நீங்கள் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் திருப்தி கிடைக்கும், தரமான பணிகளை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுக்க இயலும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர் கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல புரிந் துணர்வு ஏற்படும்.

புதிய முதலீடுகளில் பங்கேற்பது போன்ற முக்கிய முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.




நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு செல்வீர்கள். அது உங்களுக்கு உதவி யாகவும் ஆறுதலாகவும் இருக்கும். யதார்த்தமான அணுகுமுறை மேற் கொள்வது சிறந்தது. யோகா அல்லது தியானம் மூலம் அமைதியைப் பெறலாம்.

நீங்கள் இன்று கவனத்துடன் பணியாற்றுவீர்கள். உங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பணி யாற்றுவீர்கள். இதனால் பணியில் தவறுகள் ஏற்படுவது குறையும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாக பேச வேண்டும். எண்ணங்களில் தெளிவும் அதனை பேச்சில் வெளிப்படுத்துவதும் உறவில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று அதிகம் செலவாக வாய்ப்புள்ளதால் பண விஷயத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் - 15.02.2025




இன்று பலன்கள் கலந்து காணப்படும். இன்று மனதில் தெளிவு வேண்டும். வருவதை எதிர்கொள்ளுங்கள். ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆறுதல் அளிக்கும்.

இன்று வேலைகள் கூடுதலாக இருந்தாலும் நீங்கள் சமார்த்தியமாக செயல்படு வீர்கள். பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று சிறப்பான நாளாக இருக்கும்.

இன்று சிறிது உணர்ச்சிவசப்படுவீர்கள். யதார்த்த மான அணுகுமுறை தேவை. உங்கள் துணையுடன் சிறப்பாக தொடர்பு கொள்வதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணத்தை எவ்வாறு கையாள்வதென்று அறிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் செலவை கட்டுப் படுத்தி சேமிப்பை அதிகரிக்க இயலும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம். இன்று ஆற்றலும் உறுதியும் உங்களிடம் நிறைந்திருக்கும். நீங்கள் முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களிடம் நம்பிக்கையான அணுகுமுறை காணப்படும். அது உங்கள் பணியில் வெளிப்படும்.

நீங்களும் உங்கள் துணையும் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். அன்பின் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணம் சம்பாதிக்கும் திறமை மேம்படும். இதன் மூலம் சுதந்திரமான நிதி நிலைமையும் சுய சார்பும் காணலாம்.

இன்று உங்களிடம் நேர்மறை எண்ணம் காணப்படும். அது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.




இன்று தியானம் அல்லது பிரார்த் தனை மேற்கொள்வது மிகவும் அவசியம். அதன் மூலம் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கலாம்.மேலும் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்கி அமைதி பெறலாம்.

நேர மேலாண்மை திறன் மூலம் இன்று வெற்றி காண்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டால் இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். வேலை அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்பட உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பேசும் போது உங்கள் வார்த்தை களில் கவனம் தேவை.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. என்றாலும் பணத்தை சிறப்பாக கையாண்டால் தேவையற்ற செலவு களை கட்டுப்படுத்த இயலும்.




இன்று ஆன்மீக ஈடுபாடு சிறந்த பல னைத் தரும். யோகா மற்றும் தியானம் மூலமும் பலன் பெறலாம். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகள அதிகம் இருப்ப தாக உணர்வீர்கள். சிறந்த யுக்திகளைக் கையாண்டு கவனமுடன் பணியாற்றினால் இன்றைய செயல்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்.

உங்கள் துணையுடன் பேசும் போது வார்த்தையில் கவனம் தேவை. உங்கள் துணையுடன் ஒத்துப்போவ தும் அவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும் அவசியம். புரிந்துணர்வு மிகவும் அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். செலவு களை முடிந்த அளவில் கட்டுப்படுத்தி கையிலிருக்கும் பணத்தில் சமாளிப்பது சிறந்தது.

# 50 கிலோவுக்கும் அதிக ஹஷீஷ் போதை பொருளுடன் மன்னார் கடலில் மீனவரின் படகுடன் இருவர் சிக்கினர்



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் கடல் பகுதியில் கடற் படையினரால் சுற்றி வளைக்கப்பட்ட மீன் பிடிப் படகில் ஹஷீஷ் போதை பொருள் இருந்ததமை உறுதியாகியுள்ளது.

மன்னார் கடற்பரப்பில் போதைப் பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட தாகச் சந்தேகிக்கப்படும் மீன்பிடி பட கொன்றை கடற்படையினர் நேற்று சனிக்கிழமை கையகப்படுத்தி இருந்த னர்.

அத்துடன் அந்தப் படகில் இருந்த இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் எனவும் கடற்படை தெரிவித்தது.

இந்தப் படகிலிருந்து போதைப்பெ-ாருள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு பொதிகள் மீட்கப் பட்டிருந்தன.

இந்நிலையில் அந்தொ படகில் 50 கிலோகிராம் விட அதிகமான ஹஷீஷ் போதைப் பொருள் உள்ளமை தெரிய வந்துள்ளது.

மேலும், இந்த நடவடிக்கையின் மூலம் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் ஹஷீஷ் போதை பொருளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் பணி யகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படை ஊடகப் பிரிவு குறிப்பிட் டுள்ளது.